பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 54

ஞாயிற்றுக்கிழமை
19 ஜனவரி 2025

தை 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## நெடுந்தாரகைக்கு புதிய நங்கூரம்!

விரைவில் கொள்வனவு

யாழ்ப்பாணம், ஜன.19
கடலோடு அடித்துச் செல்லப்பட்ட நெடுந்தாரகைப் படகின் நங்கூரம் கண்டுபிடிக்கப் படாதநிலையில், 14

# ஆதரவளித்த தமிழ் மக்களை நிச்சயம் ஏமாற்றமாட்டோம்!



அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜனவரி 19**

**தமிழ் மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் பொய்த்துப்போக விட மாட்டோம். தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.** 14

மன்னார் துப்பாக்கிச் சூடு

## முன்னாள் சிப்பாய்கள் இருவர் நேற்றுக் கைது

மன்னார், ஜன.19
மன்னாரில் நீதிமன்றத்துக்கு முன்பாக நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் இராணுவச் சிப்பாய்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. 14

ரி.ஐ.டி. என்று அடையாளப்படுத்தி

## யாழில் கொள்ளையிட்டோர் பொலிஸ் பிடியில் சிக்கினர்

இருவர் இராணுவப் புலனாய்வாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன.19
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் ரி.ஐ.டி. என்று அடையாளப்படுத்தி நூதனமான முறையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தின் சூத்திரதாரி உட்பட ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து ஒரு தொகைப் பணம் கைப்பற் 14

## முன்பகையால் தாக்குதல்; இளைஞனுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜன.19
முன்பகை காரணமாக இளைஞர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் 23 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். 14

## தெல்லிப்பழையில் நேற்று 'பொங்கல் விழா'



யாழ்ப்பாணம், ஜன.19
தேசிய பொங்கல் விழா நேற்று யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பழைதுர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெற்றது.
புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா 14



20 லட்சம் பெறுமதியான

## 'ஆம்பருடன்' ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.19
திமிங்கல ஆம்பரை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் யாழ்ப்பாணத்தில் நேற்று யாழ்ப்பாண மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 14

## திடீரெனப் பெயர் மாற்றப்பட்டது யாழ். கலாசார மத்திய நிலையம்

இனிமேல் 'திருவள்ளுவர் கலாசார நிலையம்'

யாழ்ப்பாணம், ஜன.19
யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தின் பெயர் திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் என்று மாற்றப்பட்டுள்ளது. 14

## புங்குடுதீவில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.19
புங்குடுதீவில் உள்ள குளம் ஒன்றில் இருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அதேஇடத்தைச் சேர்ந்த 39 வயதுடைய 14

## முன்னர் வேட்பு மனுவில் உள்ளோருக்கு உள்ளூராட்சித் தேர்தலில் முன்னுரிமை

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு முடிவு

யாழ்ப்பாணம், ஜன.19
உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் முன்னர் கட்சியால் வேட்புமனு வழங்கப்பட்ட வேட்பாளர்களை முன்னுரிமை அடிப்படையில் உள்வாங்கும் அதேநேரம், புதிய வேட்பாளர்களுக்கும் வாய்ப்பளிப்பது என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நேற்றுக் காலை திருகோணமலை சர்வோதயம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக்கூட்டம் மாலை 4 மணிவரை நடைபெற்றது. 14

## கட்டைக்காட்டில் இன்னொரு மிதவை



யாழ்ப்பாணம், ஜன.19
வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடுக் கடற்கரையில் நேற்று மாலை மிதவை ஒன்று கரையொதுங்கியுள்ளது. 14



முச்சந்தி முரளி

'அப்ப இந்தக் குற்றங்களுக்கு உந்த ஆமியாக்கள் தான் காரணமாம் கண்டியளோ'

# சஞ்சீவி

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JANUARY ஜனவரி
24 25 26
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds (Next to Jaffna Fort)
JITF 2025
15th JAFFNA INTERNATIONAL TRADE FAIR
இன்னும் 5 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இவ்வாண்டு 'பட்ஜெட்' கடும் சவால்மிக்கது

பந்துல தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.19**
**2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டம் சவால்மிக்கதாக காணப்படும். தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படவேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் செயற்றிட்டத்தில் இருந்து விலகினால் மீண்டும் வரிசை யுகமே தோற்றம்பெறும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் செயற்றிட்டத்துக்கு அமைவாகவே இலங்கை செயற்படவேண்டும். 2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தில் நாணயநிதியத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் நிச்சயம் உள்ளடக்கப்படவேண்டும். இந்த ஆண்டு மொத்த தேசிய உற்பத்தியை 2.3 சதவீதமாகவும், அரச வரி வருமானத்தை 15 சதவீதத்தாலும் அதிகரித்துக்கொள்ள வேண்டும். இதிலிருந்து விலகினால் நாட்டில் மீண்டும் வரிசை யுகம் தோற்றம்பெறும் என்பதை அரசு நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் - என்றார். (ச-இ)

# ஈழத்தமிழர்களுக்கு சமஷ்டியே தேவை

*சிறீதரன் எம்.பி. வலியுறுத்து*

கொழும்பு, ஜன.19
ஈழத்தமிழர்களின் அரசியல் உரித்துகளை நிலைநாட்ட, சமஷ்டி முறையிலான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வொன்றே காலத்தேவையானது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், ஐரோப்பிய ஒன்றியத்தினரிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினருடன் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இணைந்த வடக்கு - கிழக்குக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வுடன் கூடிய தீர்வு என்பது தான் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசும் சேர்ந்து ஒஸ்லோவில் இணங்கிக்கொண்ட இறுதி விடயம்.

அதனடிப்படையில் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கும் சமஷ்டி முறைமைக்கும் இடையிலான நடைமுறை வேறுபாடுகள், 13ஆவது திருத்தச் சட்டத்தைப் புறந்தள்ளி சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டியதன் நியாயப்பாடுகள், யதார்த்தப் புறநிலைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், ஐரோப்பிய ஒன்றியத்தினரிடம் வலியுறுத்தினார். (ச-125)

# 21ஆம் திகதி கூடும் நாடாளுமன்றம்

கொழும்பு, ஜன.19
நாடாளுமன்றத்தை எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமைவரை கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10 மணிவரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மு.ப. 11.30 முதல் பி.ப. 5.30 வரை ஆளும் கட்சியால் கொண்டுவரப்படும் 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெற்று, 22 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாவது நாள் விவாதத்துக்காக ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 22ஆம் திகதி புதன்கிழமை, மு.ப. 10 மணி முதல் மு.ப. 11 மணிவரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப. 11 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப. 11.30 முதல் பி.ப. 5.30வரை 'கிளீன் ஸ்ரீ லங்கா' திட்டம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இரண்டாவது நாளாகவும் இடம்பெறும். ஜனவரி 23 வியாழக்கிழமை, மு.ப. 10 மணி முதல் மு.ப. 11 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மு.ப. 11 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. (எ-44)

# 'சதொச' கிளைகளை அதிகரிக்கத் திட்டம்

கொழும்பு, ஜன.19
நாடுமுழுவதும் உள்ள சதொச விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையை அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் ஆயிரமாக அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டில் 150 சதொச விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# டிஜிற்றல் மயமாக்கப்படும் ஓய்வூதியத் திணைக்களம்

கொழும்பு, ஜன.19
ஓய்வூதியத் திணைக்களம் டிஜிற்றல் மயப்படுத்தப்பட்டு வருவதுடன், அதற்காகப் புதிய கட்டமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எச்.எம்.எச். அபயரத்ன தெரிவித்துள்ளார்..

இந்த ஒருங்கிணைந்த கட்டமைப்பில் பல அரசு துறைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன், தனியார் நிறுவனங்களுடன் இணைந்து ஐந்து துறைகளின் கீழ் இதற்கான பணிகள் இடம்பெறவுள்ளன.

ஓய்வூதியத்துறையின் செயற்பாடுகள் மற்றும் சேவைகளை ஓய்வுபெற்றவர்களுக்கு மிகவும் திறமையான மற்றும் நட்பு முறையில் வழங்குவதே இந்த டிஜிற்றல் கட்டமைப்பின் நோக்கம் என்றும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ச-இ)

# 10 பில்லியன் டொலரை முதலிட சீனா நிறுவனங்கள் ஆர்வம்

கொழும்பு, ஜன.19
இலங்கையில் 10 பில்லியன் டொலரை முதலீடு செய்ய சீன நிறுவனங்கள் விரும்புவதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசு முறைப் பயணத்தில் இதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. குறித்த சீன நிறுவனங்கள், எரிசக்தி, வாகன உற்பத்தி மற்றும் கட்டுமானம் போன்ற பல்வேறு துறைகளில் 10 பில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான முதலீடுகளை இலங்கைக்கு வழங்கத் தயாராக உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

**சுபிரி தன சம்பத** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 18.01.2025 | சனிக்கிழமை | 0428 | T | 8 5 5 0 6 5 |

**Super Ball** (DLB)

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 18.01.2025 | சனிக்கிழமை | 2694 | X | 04 26 40 75 |

**சனிதா** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 18.01.2025 | சனிக்கிழமை | L | 14 38 58 60 | 4855 |

**SASIRI** (DLB)

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 18.01.2025 | சனிக்கிழமை | 0603 | 02 38 42 |

**லக்ன ராசி** (DLB)

| திகதி | தினம் | துலாம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 18.01.2025 | சனிக்கிழமை | ♎ | 05 11 18 19 | 4406 |

**KAPRUKA** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 18.01.2025 | சனிக்கிழமை | I | 30 | 23 36 44 65 | 1870 |

**அத கோடிபதி** (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 18.01.2025 | சனிக்கிழமை | E | 06 25 43 67 | 2520 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மரக்காலையில் தீ விபத்து

கொடிகாமம், ஜன 19

மீசாலை வடக்கு பூதவராயர் கோவிலுக்கு முன்புறமாக அமைந்துள்ள மரக்காலை ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தீ பரவியுள்ளது. இதன்போது 2 இலட்சம் ரூபா பெறுமதியான மர உபகரணங்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-25-159)

பால்நிலை வன்முறைகளைக் கையாள

# வடக்கில் மென்பொருள் தயாரிப்பு

**யாழ்ப்பாணம், ஜன. 19**

**சிறுவர் மற்றும் மகளிர் முறைப்பாடுகள் மற்றும் அவர்களது குறைகளை நம்பகத்தன்மையுடன் கேட்டறிவதற்கு எனத் தனியார் நிறுவனம் ஒன்றினால் மென்பொருள் தயாரிக்கப்பட்டுவருவதாக வடமாகாண மகளிர் விவகார சமூக சேவைகள் அமைச்சின்செயலாளர் வாகீசன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சிறுவர் மகளிர் முறைப்பாட்டைப் பதிவு செய்தல் தொடர்பான செயலமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய ரீதியாகப் பெண்கள், சிறுவர்கள் துஷ்பிரயோகம் சார்ந்த முறைப்பாடுகள், முறைப்பாடு சார் விசாரணைகளைத் துரிதப்படுத்தல், சமூகமயமாக்குதல், வழக்குகள் தொடர்பான முன்நகர்வுகள் எனப்பல்வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கி இந்த மென்பொருள் தயாரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறித்த மென்பொருள் உருவாக்கத்தின் முழுச் செலவினத்தையும் குறித்த நிறுவனமே பொறுப்பேற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-125)

## மீனவர் பிரச்சினையை சிறீதரன் தீர்ப்பாரா?

*மீனவ அமைப்புகள் கேள்வி*

யாழ்ப்பாணம், ஜன. 19

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், தமிழக முதலமைச்சருடன் கலந்துரையாடி எமது மீனவர்களின் பிரச்சினையைத் தீர்த்துவைப்பதாகக் கூறியுள்ளார். அதனை நாம் வரவேற்கின்றோம். வெறுமனே வாக்குக்காக மீனவர்களை ஏமாற்றாது செயலில் முடிந்தால் காட்டுங்கள் என்று யாழ். மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பில் அதன் உபதலைவர் பிரான்சிஸ் ரட்ணகுமார் தெரிவிக்கையில்,

கடற்றொழில் அமைச்சருக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முதலமைச்சர் ஸ்டாலினுடன் கதைப்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் அண்மையில் கிடைத்தும் அவர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்தவில்லை.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் கதைப்பதாகக் கூறி கடந்தகாலத்தில் கடற்தொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவும் எம்மை ஏமாற்றியுள்ளார்.

எனவே மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறி முன்வந்துள்ள சிறீதரன் எம்.பி. அதனைச் செயலில் காட்டவேண்டும்- என்றார். (ச-22-27)



## பாடசாலை பஸ்சேவைகள் நேரஒழுங்குகள் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன.19

பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ளும் இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் சிற்றூர்தி உரிமையாளர்களுடான கலந்துரையாடல் மாவட்டச் செயலர் ம. பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துச் சேவைகளில் ஏற்படும் தடங்கல்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

அதற்கமைய பாடசாலை மாணவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் பேருந்துச் சேவை நடைபெறுவதை உறுதிசெய்வது தொடர்பிலான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (ச-66)

## போதைப் பாக்குடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன.19

இளவாலைப் பகுதியில் கஞ்சா கலந்த மாவா பாக்குடன் இருவர் கடந்த வியாழக்கிழமை இளவாலைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய பனிப்புலம், பல்லசுட்டி ஆகிய பகுதிகளிலேயே 90 கிராம் மாவாவுடன் 28 வயதான இளைஞர் ஒருவரையும் ,50 கிராம் மாவாப் பாக்குடன் 18 வயதான இளைஞர் ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். (ச-125)



சுண்டிக்குளம் கடற்கரைப் பகுதியில் மிகப்பெரிய மிதவைப்பொருள் ஒன்று நேற்றுமுன்தினம் கரையொதுங்கியுள்ள நிலையில் அதனைக் கடற்படையினர் மீட்டு கரைக்கு எடுத்து வந்துள்ளனர். (ச-113)

## மீனவர்களை ஏமாற்ற முயற்சி முன்னெடுப்பு

*கூறுகிறார் டக்ளஸ்*

யாழ்ப்பாணம், ஜன.19

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் தமிழ்நாட்டு முதலமைச்சருடன் பேசப்போவதாகக் கூறி வடபகுதி மீனவர்களை சில அரசியல்வாதிகள் ஏமாற்ற முயற்சிக்கின்றனர் என முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பங்கேற்றார்கள்.

குறித்த நிகழ்வில் இலங்கையிலிருந்து சென்ற சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்பி எடுத்தமை சமூக ஊடகங்களில் வெளியாகியது.

இலங்கை - இந்திய மீனவர் விவகாரம் பல வருடங்களாகப் பேசுபொருளாக இருக்கின்ற நிலையில் எல்லைதாண்டிய இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்துமாறு தமிழக முதல்வரிடம் நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசியிருக்கலாம், ஆனால் அவர்கள் அவ்வாறு பேசியதாகத் தெரியவில்லை.

மக்கள் ஏதோ ஒன்றை நம்பி வாக்களித்துத் தற்போது ஏமாற்றம் அடையும் நிலையை எதிர்நோக்கியுள்ளனர் - என்றார். (ச-27)

## முருங்கைக்காய் விலையுயர்வு

யாழ்ப்பாணம், ஜன.19

சந்தைகளில் தற்போது முருங்கைக்காயின் விலை சடுதியாக உயர்ந்துள்ளதாக நுகர்வோரால் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திருநெல்வேலி சந்தையில் முருங்கைக்காய் கிலோ 2000 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுள்ளது. (ச-41-17)

## வவுனியாவில் மின்சாரம் துண்டிப்பு; தடுப்பூசிகளுக்குப் பாதிப்பில்லை!

வவுனியா , ஜன.19

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரிப் பணிமனையில் சுமார் இரண்டு மணிநேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்த போதிலும் தடுப்பூசிகள் பத்திரமாக இருக்கின்றனவென மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

மின்சாரம் தடைப்பட்டபோதிலும் தடுப்பூசிகளைப் பாதுகாக்கக் கூடிய வசதி பணிமனையில் உள்ளது. சுமார் இரண்டு மணி நேரம் மாத்திரமே மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. எம்மிடமுள்ள குளிரூட்டிகளினூடாக 24 மணித்தியாலங்கள் பாதுகாக்கக் கூடிய வசதி காணப்படுகின்றது. அந்தவகையில் தடுப்பூசிகளுக்கு எந்தவித பாதிப்பும் நேரவில்லை. பொதுமக்கள் எவ்வித ஐயமும் இன்றி தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளலாம்- என்றார். (ச-22-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை மருத்துவமனையில் வளப்பற்றாக்குறை நெருக்கடி

முல்லைத்தீவு, ஜன.19

முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் நிலவும் வளப் பற்றாக்குறை தொடர்பில் சுகாதார அமைச்சர் மற்றும் பிரதமர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லவுள்ளதாக நாடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டப் பொது மருத்துவமனையில் கண் மருத்துவர் இன்மை, நோயாளர் விடுதிகள் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு வளப்பற்றாக்குறைகள் காரணமாக நோயாளர்களைப் பராமரிப்பதில் சிக்கல்கள் எழுந்துள்ளதாக மருத்துவமனை நிர்வாகத்தினரால் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைகளை விரைந்து தீர்ப்பதற்குத் தொடர்ந்தும் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-246)

# அரிசித் தட்டுப்பாட்டுக்கு இரு வாரங்களில் தீர்வு

**கொழும்பு, ஜன.19**

**இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரிசித் தட்டுப்பாடுப் பிரச்சினைக்கு இரண்டு வாரங்களில் தீர்வுகாண்போம் என விவசாய மற்றும் கால் நடை பிரதிஅமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது தலைதூக்கி இருக்கும் அரிசிப் பிரச்சினை இன்னும் இரண்டு வாரங் களே இருக்கும். இரண்டு வாரங்களில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும்.

தற்போது நாட்டின் ஒவ்வொரு பகுதிகளிலும் விவசாயிகள் நெல்அறுவடை செய்ய ஆரம் பித்துள்ளனர். அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வோம்.

தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரிசிப் பிரச்சினை நாங்கள் அதிகாரத்துக்கு வருவ தற்கு முன்னர் இருந்ததே.

எனவே இந்தப் பிரச்சினை நாட்டில் மீண்டும் ஏற்படுவதற்கு நாங்கள் இடமளிக்கப்போவ தில்லை - என்றார். (ச-இ)

# அபிவிருத்தித்திட்டங்கள் வடக்கில் விரைவில்

## இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

இந்திய நிதியுதவியின் கீழ் வடக்கில் பருத்தித்துறைத் துறைமுகம் உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ள தீர் மானிக்கப்பட்டுள்ளதாக இந்தியத் தூது வர் தெரிவித்துள்ளார்

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகத் தில், மீனவர்களுக்கான வலைகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ச-125)



இந்தியாவின் நிதியுதவியில்

# கிளி. மலையாளபுரத்தில் திருவள்ளுவர் குடியிருப்பு

கிளிநொச்சி, ஜன.19

கரைச்சிப் பிரதேசசெயலக பிரிவுக்குட் பட்ட மலையாளபுரத்தில் இந்தியாவின் நிதியுதவியின் கீழ் அமைக்கப்பட்ட 'திரு வள்ளுவர் குடியிருப்பு' வீட்டுத்திட்ட மாதி ரிக்கிராமம் வைபவரீதியாக நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

கிராமிய நகர வீடமைப்பு மற்றும் நிர்மா ணத்துறை அமைச்சர் அனுர கருணா திலகவின் தலைமையில் இந்தி யத்தூதுவர் சந்தோஷ்ஜா பங்கேற்ற இந்த நிகழ்வில் மக்களிடம் 24 வீடுகள் கையளிக்கப்பட்டன. (ச-113)

# மரண அறிவித்தல்

மலர்வு 07 . 04 . 1952



உதிர்வு 17 . 01 . 2025

## இராசு பொன்னுத்துரை

சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், தபால் கட்டைச் சந்தி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசு பொன்னுத்துரை (சீனி / பட்டு) நேற்றுமுன்தினம் (17.01.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசு - அன்னப்பிள்ளை தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான பசுபதி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், டினேஸ் (டீன்-பிரான்ஸ்). டிலானி (லண்டன்), டிலக்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலமுரளியின் (லண்டன்) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் இரத்தினம், யோகம்மா, துரைசிங்கம், சந்திரமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மங்கையற்கரசி, காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்லக்கண்டு, மகேஸ்வரி, கதிரமலை ஆகியோரதும் அழகம்மா, காலஞ்சென்றவர்களான மணியம்மா, அருளம்மா மற்றும் அருமைராசா கமலாதேவி, சந்திரன், மோகன், சோகன், ரஞ்சன் ஆகியோரதும் மைத்துனரும், கன்சிகா (லண்டன்), பார்க்கவி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தபால் கட்டைச் சந்தி,
ஆனைக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்
மனைவி 076 170 2498

(Cs 57258) N-1

# கிளிநொச்சி மாவட்டத்தை அபிவிருத்தி செய்யுங்கள்

## தமிழ்த்தேசிய இளைஞர்பேரவை ஜனாதிபதிக்குக் கடிதம்!

கிளிநொச்சி, ஜன. 19

போரால் பாதிக்கப்பட்டு வளர்ந்துவரும் மாவட்டமாக கிளிநொச்சி உள்ளநிலையில் அதன் நகர அபிவிருத்தியில் மாற்றங்களைச் செய்யவேண்டும் என்று தமிழ்த்தேசிய இளைஞர்பேரவை ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சியில் பரந்தன்சந்தி, டிப்போச்சந்தி, கரடிப்போக்குச்சந்தி, காக்காகடைச்சந்தி மற்றும் மருத்துவமனை முன்பாக மின்விளக்குச் சமிக்ஞைகள் அமைக்கப்படவேண்டும், பரந்தன் முதல் பல்கலைக்கழகச்சந்தி வரை இருவழிப்பாதையை அமைக்கவேண்டும். நகர்ப்பகுதிகளில் உள்ள பாதசாரிக்கடவைகளில் தெருவிளக்குகள் பொருத்தப்பட வேண்டும்.

மேலும் கிளிநொச்சி நகரில் சுற்றுவட்டம் ஒன்றையும், மணிக்கூட்டுக் கோபுரம் ஒன்றையும் அமைக்கவேண்டும். இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றினால் போக் குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகளைத் தவிர்த்து நகர் அழகுற விளங்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-113,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுகாதார சேவைக்கு எதிராக அடிப்படையற்ற குற்றச்சாட்டு

## சி.ஐ.டி.யில் முறைப்பாடு பதிவு

கொழும்பு, ஜன.19

சுகாதார சேவைக்கு எதிராக முன்வைக் கப்படும் பொய்யான மற்றும் எவ்வித அடிப்படையும் அற்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரச மருந்துகள் ஒழுங்குப டுத்தல் அதிகாரசபையின் தலைவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அரச மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதி காரசபையின் தலைவர் மருத்துவர் மனுஜ் சி.வீரங்க கடந்த புதன்கிழமை இந்த முறைப்பாட்டைக் கையளித் துள்ளார்.

சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங் கள் மற்றும் அதிகாரிகளை இலக்கு வைத்து ஊடகங்களில் பொய்யான, ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்ச் சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றன என்று அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஆதாரமற்ற குற்றச்சாட்டு கள் நியாயமான தீர்மானங்களை எடுப் பதற்கும், அவற்றைச் செயற்படுத்துவ தற்கும் பெரும் இடையூறாக இருக்கின் றன. இலவச சுகாதார சேவையை வீழ்த்தவோ, சீர்குலைக்கவோ வேண் டும் என்ற உள்நோக்கத்துடன் இவ்வா றானசெயற்பாடுகள் முன்னெடுக்கப்படு கின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள் ளது. இந்த விடயம் தொடர்பாக முழு மையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அந்த முறைப்பாட் டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)




# சட்டவிரோத மணலகழ்வு; 2 டிப்பர்கள் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிவந்த இரண்டு டிப்பர்கள் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கருகில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளன.

அவர்கள் விஸ்வமடுப் பகு தியில் இருந்தே கடல் மண லைச் சட்டவிரோதமாக டிப் பர் வாகனங்களில் ஏற்றி வந்தமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட இரண்டு டிப்பர் சாரதிகளையும் சாவ கச்சேரி நீதிவான் நீதிமன் றத்தில் முற்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகப் பொலிஸார் தெரி வித்தனர். (ச-25, 23)

# மாட்டை இறைச்சியாக்கிய இருவர் சிக்கினர்

யாழ்ப்பாணம், ஜன.19

சட்டவிரோதமாக மாட்டை இறைச்சியாக்கி நாவற்குழிப் பகுதியில் விற்பனை செய்த சந்தேகநபர்கள் இருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் உப பரிசோதகர் மயூரன் தலை மையிலான குழுவினர் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். அத் துடன் அவர்களிடமிருந்து 41 கிலோ மாட்டி றைச்சியும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரையும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-28)

# சாவகச்சேரி நகரப்பூங்கா மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், ஜன.19

சாவகச்சேரி நகராட்சிமன்றத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நகரப்பூங்கா நக ராட்சிமன்றச் செயலாளரால் நேற்றுமுன்தினம் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பூங்கா 2020- 2021 ஆம் ஆண்டு அப்போதைய நகரசபையின் நிதி ஒதுக்கீட்டில் ஏ-9 பிரதான வீதி நுணாவில் மத்திய பகுதியில் அமைப்பதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கென 21 மில்லியன் ரூபா பெறுமதியில் காணி கொள்வனவு செய்யப்பட்டு பணிகள் இடம்பெற்றன.

அத்துடன் இரண்டு வருடங்களுக்கு முன்பே 5.5 மில்லியன் ரூபா பெறுமதியில் சிறுவர் விளையாட்டு உபகரணம் ஒன்றும் கொள்வனவு செய்யப்பட்டது. எனினும் பல்வேறுபட்ட காரணங்களால் திறந்து வைப்ப தில் தாமதம் ஏற்பட்ட நிலையில் தற்போது அவற்றை நிவர்த்திசெய்து மக்கள் பாவனைக் காக குறித்த பூங்கா திறந்து வைக்கப்பட்டுள் ளது. (ச-28)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை.

**இடபம்:** போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கக்கூடும். கணவன் மனைவிக்கிடையே சிறு பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மிதுனம்:** இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்களால் ஓரளவுக்கு நன்மை ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். அலுவலகத்தில் பணிச்சுமை குறையும்.

**கன்னி:** தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் கொடுப்பீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**துலாம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதை இன்று தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்** : எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். தேவையற்ற செலவுகளால் மனச் சஞ்சலம் ஏற்படும்.

**மகரம்:** இன்று எந்த ஒரு விஷயத்திலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை முக்கியமான விஷயத்தில் உங்களுடைய ஆலோசனையைக் கேட்டுச் செயல்படுவார்.

**மீனம்:** புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். குடும்பம் தொடர்பாக எடுக்கும் முக்கிய முடிவு சாதகமாக முடியும். சகோதரர்கள் உங்களிடம் உதவிகேட்டு வருவார்கள். தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள்.





# தாயகம் அறக்கொடையினரால் உதவிப்பொருள்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19

தாயகம் அறக்கொடை நிறுவனத்தினால் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் 150 குடும்பத்தினருக்கு பொங்கல் பானை உள்ளிட்ட பொங்கல் பொதிகளும் மற்றும் விழிப்புலனற்றோர் சங்கத்தினரின் குடும்பத்தைச் சேர்ந்த 180 மாணவர்களுக்கு சீருடைகளுடன் காலணிகளும் வழங்கிவைக்கப்பட்டன. 1 கோடியே 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களே இவ்வாறு கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வு வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் மண்டபத்தில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ச-25)




# மீன்பிடி வலைகள் வழங்கிவைப்பு!




யாழ்ப்பாணம், ஜன. 19

இந்திய அரசின் நிதிஒதுக்கீட்டில் வடமராட்சி வடக்கு சமாசத்துக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட மீனவர்களுக்கு மீன்பிடிவலைகள் வழங்கும் நிகழ்வு பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது .

நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் எஸ். ஸ்ரீசாய் முரளி மற்றும் கடற்றொழிலாளர் சங்கத்தினர் கலந்துகொண்டனர். (ச-25, 100)

# பொங்கல் விழா

மன்னார்,ஜன.19

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் தைப்பொங்கல் விழா மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக அடம்பன் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அதிபர் மை.கிறிஸ்ரியான் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-40-56)

# பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜன. 19

பிரித்தானியக் காரை நலன்புரிச் சங்கத்தின் அனுசரணையில் காரைநகரைச் சேர்ந்த பல்வேறு பொது அமைப்புகளின் இணை ஏற்பாட்டில் பட்டறை நிகழ்வு காரைநகரில் அமைந்துள்ள சலெஞ்செர்ஸ் விளையாட்டு மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

'ஊர் திரும்புதல்' என்கின்ற பிரதான கருதுகோளை முன்வைத்து ஊரின் கலை மற்றும் பாரம்பரியம், விவசாய வளர்ச்சி மற்றும் நீர் மேலாண்மை, பொருளாதார முன்னேற்றம், தொழில்நுட்பத்தின் பங்கு தொடர்பிலான பல விடயங்கள் இந்த நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டு அவை தொடர்பாகப் பேசப்படவுள்ளன.

நிகழ்வின் இறுதியில் பட்டறை தொடர்பாக நடத்தப்பட்ட நீச்சல், கட்டுமரம், கபடி, கிளித்தட்டு மற்றும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளிலும் கட்டுரை, சதுரங்கப் போட்டிகளிலும் வெற்றியீட்டியோருக்கு பரிசுகளும் வழங்கிவைக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-25, 66)

# எம்.ஜி.ஆர். நினைவுதினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்ப்பாணத் எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கதின் குடும்பத்தினரின் ஏற்பாட்டில், மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்தியப் பிரபல நடிகருமான எம்.ஜி.இராமசந்திரனின் 108 ஆவது பிறந்ததின நிகழ்வு கல்வியங்காடுப் பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி. ஆரின் சிலைக்கு முன்பாக நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது யாழ் எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் குடும்பத்தினரால் மாணவர்களுக்குகான கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25, 125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# நாளைய விடியலின் புதிய கீதங்கள்!

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் நாளை பதவியேற்கவுள்ளார். மிதவாதப் போக்குடைய அதிபர் ஜோ பைடனின் ஆட்சி இன்று பின்னிரவுடன் முடிவுக்கு வரவுள்ள நிலையில், உலகம் புதியதொரு பாதையில் பயணப்பட இன்னும் 24 மணிநேரங்களுக்கும் குறைவான அவகாசமே உள்ளது.

பைடனிடம் இருந்து ட்ரம்பின் கைகளுக்குள் அதிகாரம் செல்லும் இன்றைய இரவுப்பொழுது அமெரிக்க வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்குத் திருப்பங்கள் நிறைந்தது என்கின்றனர் வல்லுநர்கள். பைடனின் ஆட்சியின் கீழ், 'நட்பு நாடுகள்', 'கூட்டணி', 'பொது எதிரி', 'உலகளாவிய நன்மை கருதிய திட்டம்' என இருந்த அனைத்தும் அமெரிக்க அதிகார மேசையில் இருந்து இன்று இரவுடன் தூக்கிக் கடாசப்படவுள்ளன. நாளைமுதல் டொலர் ஒன்றே அளவுகோல். நட்பு நாடுகளும் கிடையாது, கூட்டணியும் கிடையாது, பொது எதிரியும் கிடையாது, உலகளாவிய நன்மையும் கிடையாது. அமெரிக்காவுக்கு எதுவெல்லாம் வருவாயைக்குவிக் கின்றதோ அதுவெல்லாம்தான் உலகளாவிய நன்மை என்ற பாதையில் அமெரிக்கா 'தீவிர வலதுசாரிச் சிந்தனையுடன்' நாளைய விடியலில் புதிய கீதம் இசைக்கக் காத்திருக்கின்றது.

கடந்த மூன்று வருடங்களாக இடம்பெற்றுவரும் உக்ரைன் 'ரஷ்ய மோதலைப் பதவியேற்று ஓரிரு இரவுக்குள் முடிவுக்குக் கொண்டுவருவேன் என்று அறிவித்திருந்த ட்ரம்ப், தனது முடிவில் உறுதியாகவும் உள்ளார். அமெரிக்கா சொல்லிவிட்டது என்பதற்காகக் கேட்கப்போகும் நாடல்ல ரஷ்யா. ட்ரம்பின் தலையாட்டி பொம்மை புடினும் அல்லர். எனவே, ட்ரம்ப் ஆட்சிப்பீடம் ஏறும்போது எதிர்பார்ப்பை எகிற வைத்திருப்பது உக்ரைன்' ரஷ்ய மோதலின் அடுத்தகட்ட செல்நெறிதான்.

இதைவிட வம்புக்கு இழுக்காத விடயப்பரப்பே இல்லை என்ற அளவுக்கு சர்ச்சைகளையும் சண்டைகளையும் வாரிக் குவித்தபடிதான் ட்ரம்ப் நாளை ஆட்சியில் ஏறுகின்றார். கிறீன்லாந்தை டென்மார்க் அமெரிக்காவிடம் ஒப்படைக்கவேண்டும் என்று கோரியிருப்பது, பனாமா கால்வாயில் அமெரிக்காவுக்குச் சலுகை வழங்கவேண்டும் இல்லாவிடில் பனாமாவைப் பறிப்போம் என்று மிரட்டியிருப்பது, பிரிக்ஸ் கூட்டணியில் உள்ள நாடுகளுக்கு வர்த்தக மிரட்டலை விடுத்திருப்பது, ஈரானுக்கு அணுவாயுதத் தாக்குதல் மிரட்டலை விடுத்திருப்பது, சீனாவுடன் வர்த்தகப் போரை ஆரம்பித்திருப்பது என்று கண்ணுக் கெட்டிய தூரம்வரை முற்றுப்புள்ளியே இல்லாத நிலையில்தான் ட்ரம்ப் இம்முறை களமிறங்குகின்றார்.

எல்லாவற்றையும்விட, அமெரிக்காவின் இரட்டையர் என்று அறியப்படும் கனடாவுடனும் ட்ரம்ப் வர்த்தக மோதலை ஆரம்பித்திருக்கின்றார். கனடாவுக்குள் இருந்து அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 வீத வரி விதிப்பை ட்ரம்ப் அறிவித்துள்ளார். இதைத் தவிர்க்கவேண்டுமாயின், கனடா தனிநாடாக அல்லாமல் அமெரிக்காவின் ஒரு மாநிலமாக இருக்கவேண்டும் என்றும் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார். ஆகச்சிறந்த அயல் நாட்டுக்கு இலக்கணமாகச் செயற்பட்ட கனடாவுக்கே இந்த நிலைமை என்றால், இதிலிருந்தே ட்ரம்பின் அதிகாரக் கரத்தின் ஆபத்தைப் புரிந்துகொள்ள முடிகின்றதல்லவா? ஒன்றுமட்டும் உண்மை உலகம் ஆயுதப் போரை அல்லாமல் வர்த்தகப் போருக்குள் நுழைய ஆரம்பித்து வாரங்கள் கடந்துவிட்டன. இதன் அடுத்தகட்ட நடவடிக்கைகள் உலகை நின்று வதைக்கும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

உங்களால் ஒரு காரியத்தை முடிக்க முடியும் என்றால் முடியும்; முடியாது என்றால் முடியாது. இதுவே மனதின் அரிய சக்தி.

– ஹென்றி போர்ட் –







## சிறந்த சுற்றுலாத்தளம் தரவரிசையில் இலங்கை

கொழும்பு, ஜன.19
2025ஆம் ஆண்டில் சுற்றுலாப்பயணிகள் பயணிக்கும் முதல் 10 இடங்களுக்குள் இலங்கை தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
'பிபிசி டிராவல்' இன் உலகின் தலைசிறந்த பயண இடங்களுக்கான அறிமுக வழிகாட்டியில் இலங்கை ஒன்பதாவது இடம் பிடித்துள்ளது.
மூடுபனி, மலை உச்சியில் உள்ள தேயிலைத் தோட்டங்கள், சுற்றித் திரியும் காட்டு யானைகள், பழங்காலக் கோவில்கள் மற்றும் அலைச்சறுக்கு ஆகியவற்றுக்கு இலங்கை புகழ்பெற்ற நாடாக விவரிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மதம்சார் பிரிவினையை களைய வேண்டும்

கொழும்பு, ஜன.19
மதம் சம்பந்தமான விடயங்களை மிகவும் அவதானத்துடனும் உணர்வுபூர்வமாகவும் கையாள வேண்டும் என தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பிரதியமைச்சர் முனீர் முலாபிர் தெரிவித்துள்ளார்.
வடக்கு - கிழக்கில் தனியார் காணிகளில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள வழிபாட்டுத்தலங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் நாங்கள் நேர்மையுடன் செயலாற்றுவோம்.
மன்னார், முல்லைத்தீவுப் பிரதேசங்களில் காணப்படும் காணிப்பிரச்சினைகளுக்கும் விரைந்து தீர்வு எட்டப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)




## ரயில் சேவைகள் இரத்து

கொழும்பு, ஜன.19
ரயில் சாரதிகள் தரம் உயர்த்தல் பரீட்சைக்குத் தயாராகி வருவதால் நேற்று குறுகிய ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமைய சுமார் 25 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டதாக ரயில்வே திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## மூடப்பட்டது பிக்குகள் பல்கலை

கொழும்பு, ஜன. 19
அநுராதபுரத்திலுள்ள பிக்குகளுக்கான பல்கலைக்கழகத்தில் புகுமுக பிக்குகளுக்கும், சிரேஷ்ட பிக்குகளுக்குமிடையே இடம்பெற்ற மோதல் காரணமாக கடந்த 11ஆம் திகதி முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.
அதேவேளை இந்த மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் உயர் கல்வியமைச்சு மற்றும் புத்தசாசன அமைச்சு என்பன பேச்சுகளில் ஈடுபட்டுள்ளன. (ச-25, 9)

## மலையகப் பாடசாலைகளுக்கு 60 'ஸ்மார்ட்' வகுப்பறைகள்

கொழும்பு, ஜன. 19
இந்திய அரசின் நிதியுதவியில் மலையகப் பாடசாலைகளில் 60 ஸ்மார்ட் வகுப்பறைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த வியாழக்கிழமை கைச்சாத்திடப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவும் பெருந்தோட்ட கட்டுமான அமைச்சின் செயலர் பிரபாத் சந்திரகீர்த்தியும் ஒப்பமிட்டுள்ளனர். இதற்கென 508 மில்லியன் ரூபா இந்திய அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. (ச-25,6)

நாளை
திங்கட்கிழமை - தை - 04
20.01.2025
சுபநேரம் : 12.36 - 02.06
ராகுகாலம் : 08.06 - 09.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.19

குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நூற்றாண்டு விழா தொடர்பான கலந்துரையாடல், பாடசாலைச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் மற்றும் புதிய நிர்வாகசபைத் தெரிவு என்பன நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-66)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன.19

தச்சநாதன்குளம் பண்டாரிகுளம் அருள்மிகு ஸ்ரீ வலம்புரி விநாயகர் தேவஸ்தானத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கும்பபூஜை மற்றும் விஷேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

பக்தர்கள் அனைவரையும் கும்பாபிஷேக வழிபாடுகளில் கலந்து கொண்டு ஆலயத்தின் திருப்பணிக்கு தம்மால் முடிந்த உதவிகளை வழங்குமாறும் ஆலய பரிபாலனசபையினர் கேட்டுள்ளனர். (எ-25)

## தென்னை மரத்திலிருந்து தவறி வீழ்ந்தவர் காயம்!

யாழ்ப்பாணம், ஜன.19

தைப்பொங்கலுக்காக உறவினருக்குத் தேங்காய் பிடுங்க தென்னை மரத்தில் ஏறிய இளைஞன் தவறி வீழ்ந்து படுகாயமடைந்துள்ளான். இந்தச் சம்பவம் மட்டுவில், சந்திரபுரத்தில் கடந்த திங்கட்கிழமை நடந்துள்ளது.

18 வயது இளைஞர் ஒருவரே தலையில் பலத்த அடிபட்டு நினைவிழந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அங்கு அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-131)



கிளிநொச்சி முழங்காவில் ஆரம்பப் பாடசாலையின் ஒளிவிழா அதிபர் பா.சதீஸ் தலைமையில் பாடசாலைப் பிரதான மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். கலை நிகழ்வுக்ளும், பரிசளிப்பும் இடம்பெற்றன. (ச-25-159)

## மரண அறிவித்தல்

தோற்றம்
30 . 03 . 1941



மறைவு
16 . 01 . 2025

### திருமதி கனகேந்திரம் சிவபாக்கியம்

மானிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகேந்திரம் சிவபாக்கியம் அவர்கள் கடந்த 16.01.2025 வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், திரு. திருமதி நவரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், கனகேந்திரம் (Canada) அவர்களின் பாசமிகு மனைவியும், தர்மேந்திரா (Germany) அவர்களின் அன்புத் தாயாரும், ராஜனியின் அன்பு மாமியாரும், ராகவி, ஆரபி, ஆரணனின் பேர்த்தியும், வேலாயுதபிள்ளையின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 2317) A-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்.



கடந்த 20.12.2024 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்ப குலதெய்வம்

அமரர்

### மயில்வாகனம் அமிர்தலிங்கம் (அமுதர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று முன்தினம் (17.01.2025) வெள்ளிக்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. இன்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கிருத்தியம் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.**

மேலும் எமது குடும்பக் குலதெய்வத்தின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், ஊடகங்கள் மூலமும் துக்கங்களைப் பகிர்ந்தோருக்கும், அஞ்சலிப் பிரசுரங்களையும், பதாகைகளையும் வெளியிட்டு அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், எமக்கு உணவுகள் தந்த பெருமைக்குரியவர்களுக்கும், எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம்
03.02.1952

மறைவு
20.12.2024

"தாஜ்மஹால்"
கைதடி தென்கிழக்கு,
கைதடி.

குடும்பத்தினர்
077 632 7690

(CS/57247) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
19 . 05 . 1924



மறைவு
09 . 02 . 2015

## அமரர் திருமதி தங்கரத்தினம் கந்தையா

திதி : தேய்பிறை ஷஷ்டி

பத்து ஆண்டுகள் பறந்து ஓடிப்போனாலும் எம்
கண்முன் கடவுளாய் வாழ்ந்த எங்கள் அன்னையே!
அம்மாவே! எண்ணில் அடங்காத பல அறங்கள்
புரிந்து ஒன்பது முத்துக்களை மக்களாய் பெற்றெடுத்த
மகராசியே எண்ணற்ற மக்களின் மனதில் அன்பால்
இடம் பிடித்து மாண்புடன் வாழ்ந்த அன்னையே! எங்கள்
அம்மாவே ! பத்து ஆண்டுகள் பறந்து ஓடினாலும்
உங்கள் நினைவுகள் ஒவ்வொன்றையும் நித்தமும்
நினைத்து நினைத்து நீங்கா நினைவுகளுடன்
வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எங்கள் ஆருயிர் அம்மாவின் ஆத்மா சாந்தியடைந்து கடவுளோடு இரண்டறக் கலந்திருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(கனடா)
416 292 8592

# கண்ணீர் புஷ்பங்கள்



சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் மூத்த பரம்பரை அறங்காவலரும் முன்னாள் அறங்காவலசபைத் தலைவருமான (1983-1989) இலங்கை அரச பிரதம சட்டத்தரணியுமான உயர்திரு அமரர் சிவா பசுபதி அவர்கள் அவுஸ்ரேலியா சிட்னியில் அம்பாள் பாதகமலங்களை அடைந்துள்ளார். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் தெரிவிப்பதோடு ஆத்மா தங்கு சங்களைப்பதி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் பாதகமலங்களில் சிவலோக பிராப்தி பெற்று சாந்தியடைய வேண்டுமென கண்ணீர் புஷ்பங்களினால் அஞ்சலி செய்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !

ஆதீன பிரதம குருக்கள் ஐயா
குடும்பத்தவர்கள்
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவில்,
சுதுமலை, மானிப்பாய்.
18.01.2025

# கசிப்புடன் இருவர் சுழிபுரத்தில் கைது

யாழ்., ஜன.19

சுழிபுரத்தில் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வட்டுக்கோட்டை சுழிபுரம் கிழக்குப் பகுதியில் 750 மில்லிலீற்றர் கசிப்புடன் இளைஞர் ஒருவரும் சுழிபுரம் மத்திப் பகுதியில் 750 மில்லி லீற்றர் கசிப்புடன் ஒருவருமே பொலிஸாரின் விசேட ரோந்து நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களுக்கெதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(சு-125)

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 08 . 1938



மறைவு
18 . 01 . 2025

## அமரர் முத்துதம்பி சேனாதிராஜா

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம், அராலி, நீராவியடி, Botswana, Canadaவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துதம்பி சேனாதிராஜா (ஓய்வு பெற்ற பொறியியலாளர், தொலை தொடர்பு திணைக்களம்) அவர்கள் நேற்று (18.01.2025) சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் முத்துதம்பி சிவபாக்கியம் தம்பதியரின் மகனும் செல்லத்துரை-சிதம்பரவள்ளி அவர்களின் மருமகனும், மகாலக்ஷ்மியின் கணவரும் அமிர்தலிங்கம் லங்காதேவி அவர்களின் சகோதரனும், செல்வராஜன் சிவலக்ஷ்மியின் தந்தையும் பஞ்சாட்சரஞானியார், ஞானசுகந்தியின் மாமனாரும், செல்வலக்ஷ்மி, ஞானலக்ஷ்மி, சுபலக்ஷ்மி, ஞானலாகரி, ஞானலாவணி, சௌமியலக்ஷ்மி, ஏகநாதன் ஆகியோரின் பேரனும், ஆதிரையனின் பூட்டப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2025) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நீராவியடியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதி கிரியைகள் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் இந்து மயானத்திற்கு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
செல்வராஜன் (மகன்)
விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

35, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
071 847 4685

(CS 2315) V-1

# மரண அறிவித்தல்



## அமரர் பாலசுப்பிரமணியம் சிவகாமி அம்மையார்

ஏழாலை தெற்கு விழிகிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சிவகாமி அம்மையார் நேற்று (18.07.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், சிவபாலன் (முன்னாள் ஆசிரியர் இரத்மலானை இந்துக்கல்லூரி), துவாரகன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் யாழ் போதனாவைத்தியசாலை), வாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் காரைநகர் பிரதேசசபை), டபரூபன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், வலிதெற்கு பிரதேசசபை) அவர்களின் அன்புத் தாயாரும் அன்பரசி (பிரதம பொறியியலாளர் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை கொழும்பு) சிவச்செல்வன் (ஆசிரியர் யா/விக்டோரியாக் கல்லூரி) சத்தியவதனா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரலிங்கம் சந்திரலிங்கம் மற்றும் ஞானாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, கந்தையா, தெய்வானை, வள்ளியம்மை, மற்றும் இலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், யர்சிகன், சிவாதிகா, கேசிகன், காருண்யா, தாரகா, கீர்த்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

விழிசிட்டி,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 2319) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுப்பிரமணியம்
**மகேந்திரராஜா**
(படையப்பா - சிவன் ரவல்ஸ் உரிமையாளர்)

பிறப்பு 09.12.1960 — இறப்பு 11.02.2023

ஈராண்டும் ஆனது எங்கள்
ஆருயிர் தந்தையை இழந்து
எத்தனையோ பேர் இருந்தும்
அனாதையைப்போல் வாழ்கின்றோம்
நித்தம் நித்தம் எங்கள் கண்களிலே
ஒளி தந்து மறைகின்றீர்கள்
அப்பா என்று நாங்களும் அழைக்கையில்
காற்று வேகத்தில் விரைந்து செல்கின்றீர்கள்
ஏனென்றால் உங்களுக்கும் தெரியும்
மீண்டும் ஒரு முறை உங்களை
பிரிந்து வாழமாட்டோம் என்று
அடுத்த பிறப்பிலும் நீங்கள்
எங்கள் கூடவே சேர்ந்து
வாழ ஆசைப்படுகின்றோம்
அப்பா.........

தொட்டிலடி,
சங்கானை.

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

(cs 57228) (N-1)

## பெண் பணியாளர் தேவை

ஊரெழு பலாலி வீதியில் அமைந்துள்ள பான்சி கடை ஒன்றிற்கு அனுபவமுள்ள/ பழகவிரும்பும் பெண் பணியாளர்கள் தேவை.

சம்பளம் - 20,000/- - 40,000/-

**077 395 7979, 077 793 7273**

(CS/57256) J-1

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சுப்பர் மார்க்கட் மற்றும் பலசரக்கு கடைக்கு வேலையாட்கள் தேவை.

- வயதெல்லை 18 - 45
- Sales Assistant (உதவியாளர்)
- Computer Billing + Cashier
- Manager (02 Years Experience)
- Store Keeper
- Part Time (5.00pm - 10.00 pm)

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**077 419 5209, 077 419 5015**

## வல்லை முதியோர் இல்லம்
## ஆண், பெண் முதியோரை இணைத்தல் மற்றும் பெண் பணியாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் கடந்த 8 வருடங்களாக இயங்கிவரும் வல்லை முதியோர் இல்லத்திற்கு ஆண். பெண் முதியோர்களை இணைப்பதற்கு ஆர்வம் உள்ளோர் முன்வரலாம். மேலும் பெண்கள் இல்லத்தில் பணியாற்றுவதற்கு பராமரிப்பாளர் தேவை. உணவு தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :-

**077 810 6857, 077 154 2067, 021 226 5551**

(CS/57248) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 11 . 1948 — மறைவு 14 . 01 . 2025

## விசுவநாதன் விமலாம்பிகை

களுவேட்டி கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கிளானையை வதிவிடமாகவும் கொண்ட விசுவநாதன் விமலாம்பிகை கடந்த 14.01.2025 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகரத்தினம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற விசுவநாதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான விசுவநாதர், செந்தில்நாதன், கமலாம்பிகை, நவரத்தினம் (அச்சா), கணேசலிங்கம் (லிங்கம்) மற்றும் அமிர்தாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான விஜியலட்சுமி, விஜியகரன் மற்றும் விஜயகுமாரன், விஜியேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கல்பனா, பிருந்தா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், விகாஷ், அஷ்மிகா, அஹானா, வர்சன், வனிஷன், வனோஷன், லஷ்மிதா, விக்னேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2025) ஞாயிறுக்கிழமை எழுவாவுடை மல்லாகம் அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
விஜியேந்திரன் (விஜி) 074 290 9874
விஜயகுமாரன் (ராசன்) [illegible] 0421
அமிர்தாம்பிகை (சகோதரி) 077 2634 052

எழுவாவுடை தெல்லிப்பளை,
மல்லாகம்.

(Cs 57236) N-1

## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் வீதியில் நல்லையா அமிர்தநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (611751729 V) அடங்கிய கறுப்பு நிற பை ஒன்று தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

**077 760 6101**

(CS:57252) N-1

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மல்லாகம் K.K.S Road இல் அமைந்துள்ள ஒழுங்கையில் இரண்டாவது வீடு 2.5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 3 அறைகள், குளியலறை, சமையலறை இதர வசதிகளுடன்.

**076 744 8099**

(CR:44039) J-1

# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு சிவலோகநாயகி



தோற்றம் 09.05.1941 — மறைவு 17.01.2025

விடத்தல்பளையைப் பிறப்பிடமாகவும், உசனை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சிவலோகநாகநாயகி நேற்றுமுன்தினம் (17.01.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராம நாதன் - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் அன்பு மனைவியும், ஐங்கரன், கிருபாகரன், கருணாகரன், கவிதா, சிவாகரன் ஆகியோ ரின் அன்புத் தாயாரும், பிரேம லதா, சுபாசினி, அபர்ணா, கேதீஸ் வரன், அர்ப்பனா ஆகியோரின் அன்பு மாமியும், சங்கீத், மாதுரி, திவ்யெஸ், சுஞ்யெஸ், ரஜினி, பிரியங்கா, பிரதிகா, தக்ஷயா, லக்ஷயா, திருக்ஸன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசன் ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
கிருபாகரன் - 077 347 1065
கருணாகரன் - 077 944 9512
கவிதா - 077 440 9902
சிவாகரன் - 0061 401 225582

உசன், மிருசுவில்.

(CS/ 57238) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்க நகை விற்பனைக்கு

மிக[illegible] சுத்தமான தங்க நகை விற்பனைக்குண்டு.

077 492 7947, 076 036 0923

## வேலையாள் தேவை

பழக்கடைக்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு: 077 036 6388

## வேலைக்கு ஆள் தேவை

- யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நகைக்கடை ஒன்றிற்கு கணக்காளர் (Accountant) தேவை. முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு ஒன்றிற்கு வீட்டுப் பணிப்பெண் மற்றும் துப்புரவுப் பணியாளர் தேவை.

தொடர்பு: 077 623 7416



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்

இந்தியாவில் ஆன்மீகத்துறையில் 10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)

தொடர்புகளுக்கு :- 077 281 1234

(CS/2177) J-1

## கொள்வனவு செய்யப்படும்

நெல், தானியங்கள் கொள்வனவு செய்யப்படும்-மாப்பியன் மில்

தொடர்பு: 077 772 2215

## வாகனம் தேவை

மாத வாடகைக்கு வாகனம் தேவை சாரதி அல்லாமல் (பட்டா-ரக வாகனம், முச்சக்கரவண்டி)

தொடர்பு: 075 829 3256, 077 635 4224

## கோழி மலிவு விலையில்

| | |
|---|---|
| புறொயிலர் இறைச்சி | : 850.00 |
| முட்டை | : 32.00 |

**நியு சிற்றி கோழிக்கடை**
**நாவாந்துறை மார்க்கட்**
**யாழ்ப்பாணம்.**

(CS 2116) J-1

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் எம்மிடம் உள்ளனர்.

மிகப்பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

077 138 7596, 071 999 9306

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com

(CS/2119) J-1

## புளோரன்ஸ் நேர்சிங் முதியோர் பராமரிப்பு இல்லம்



### எங்களுடைய சேவைகள்

- நீண்ட கால படுக்கை நோயாளிகளை சுத்தமாக பராமரித்தல்
- அங்கம் இழந்தவர்களை அன்பாக பராமரித்தல்
- தனிமையில் மன அழுத்தத்தில் வாழ்பவர்களை பராமரித்தல்
- உங்களுடைய தொழில் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக பெற்றோரை கவனிக்க முடியாதவர்கள் எங்களிடம் அனுமதியுங்கள்.
- விடுமுறைக்காக வெளியூர் செல்பவர்கள் நாட்கள் அடிப்படையிலும் வார அடிப்படையிலும் எம்மிடம் விட்டுச் செல்லலாம்.

மிகவும் குறைவான கட்டணத்தில் நிறைவான சேவைகள்

(CS/57185) J-1

தொடர்புகளுக்கு
077 718 6438 / 077 482 4473
கந்தரோடை சுன்னாகம் (வுந்நாகி அம்மன் கோவிலடி)

## வேலைக்கு ஆட்கள் தேவை

யாழிலுள்ள பிரபல விடுதிக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் உணவு பரிமாறுபவர் தேவை.

தொடர்புகளுக்கு: 076 624 8529

(cs 57257) (N-1)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 ம் ஆண்டு பிறந்த பூரம் பாவம் 64, சைவபோசன மணமகனுக்கு சைவ போசன மணமகள் தேவை

077 899 4626

## மணமகன் தேவை

யாழ். இந்து, கௌரவ குடும்பம் (V), 1997 இல் பிறந்த கேட்டை நட்சத்திரம் 1 செவ்வாய் ஆசிரிய மணமகளுக்கு மணமகன் தேவை. உள்நாடு, வெளிநாடு விரும்பத்தக்கது.

075 633 9816

(CR/44134) J-1

## வெள்ளிவிழாக்காணும் காமாட்சி முன்பள்ளியினை வாழ்த்துகின்றோம்




வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானத்தினால்
இரண்டாயிரமாம் ஆண்டு (19.01.2000)
ஆரம்பிக்கப்பட்டு நிறைந்த மழலைகளைத் தம்பால் ஈர்த்து
உயர்ந்த நிலையில் ஆளுமைமிக்க சமூகத்தை உருவாக்கி
சிறந்த முறையில் இயங்கி

**இன்று வெள்ளிவிழாக்காணும்**
**"காமாட்சி முன்பள்ளி"** யை வாழ்த்துவதுடன்,
கல்விப்புலம் பாராட்ட அர்ப்பணிப்புடன்
அருஞ்சேவையாற்றும் ஆசிரியர்களுக்கும்,
இந்த முன்பள்ளியை ஆரம்பித்து
சிறந்த வகையில் நிர்வகித்துவரும்
வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் தேவஸ்தான
தர்மகர்த்தாசபையினருக்கும் நன்றி கூறி வாழ்த்துகின்றோம்.
மேன்மேலும் காமாட்சி முன்பள்ளி கல்விச் சேவையில் மேன்மையுற காமாட்சி அம்பாளின் அருளை வேண்டும்.

**ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்**
**நாச்சிமார்கோவிலடி.**

(cs 57253)(N-1)

## தேவை

பாவித்த தூண், தகரம் தேவை (வேலி அடைப்பதற்கு)

தொடர்பு: 077 255 0807

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம் பலாலி வீதிக்கு முன்பாக பெறுமதிவாய்ந்த சகல வசதிகளுடன் 10 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :-
077 363 0256, +614 026 31816

(cs 41390) (2.6)

## விற்பனைக்கு

படம் அல்பத்துடன் ஒட்டுப்படாத (Moisture Free) 150 படங்கள் போடக்கூடிய அல்பம் விற்பனைக்கு உண்டு.

**விஸ்ரா விஷன் கலர் லாப்**
**347, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

(cs.57251) (N-1)

## வீடு வாடகைக்கு

138. ஆடியபாதம் வீதி, கேணியடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணத்தில் இரண்டு படுக்கை அறைகள், சமையலறை, களஞ்சிய அறை (Store Room). Hall / Garage என்பவற்றுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
மாத வாடகை 50000/-

077 237 4439

(cr 44132) (N-1)

## காணி விற்பனைக்கு

மாவிட்டபுரம் மயிலிட்டி பிரதான வீதியில் யாழ்ப்பாணம் விமான நிலையம், மயிலிட்டி உப பிரதேச அலுவலகத்திற்கு அருகாமையில் பண்ணை அமைப்பதற்கு ஏற்ற 76 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

0773410005
0778213472

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றுடன் தங்கி இருந்து உதவிபுரிய பணிப்பெண் ஒருவர் தேவை

தொடர்புகளுக்கு:
077 329 2259

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள, வைத்தியர் ஒருவரின் தனிப்பட்ட பாவனையில் இருக்கும் Alto K10 (Auto gear) கார் ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
077 805 2520

## பணி வெற்றிடம்

கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் ஹாட் வெயார் நிறுவனத்திற்கு பின்வரும் பணிநிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கணக்காளர்
2. காசாளர்
3. கணினி இயக்குநர்

பொருத்தமானவர்கள் தங்களது விண்ணப்பங்களை 076 000 4903 என்ற WhatsApp இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.

## காணி விற்பனைக்குண்டு

அச்சுவேலி சந்நிதி வீதி வீரபத்திரர் கோவிலடியில் 6 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:
076 882 8694, 077 411 8851

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி

# நீர் சுத்திகரிப்பு நிலையம் பார்வையிட்ட அமைச்சர்





கிளிநொச்சி, ஜன. 19
கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகளை நகர அபிவிருத்தி, நிர்மாணத் துறை, வீடமைப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அநுர கருணாதிலக மற்றும் பிரதிஅமைச்சர் ரி.பி சரத் ஆகியோர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நேரில் சென்று பார்வையிட்டனர். உலக வங்கியின் நிதியனுசரணையில் சுகாதார மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் இந்த நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச-25,113,214)


## கண்ணீர் அஞ்சலி

**திருமதி ஸ்ரீகமலாதேவி கைலாசபதி**



மலர்வு 05.06.1951 உதிர்வு 15.01.2025

நிலையில்லா வாழ்வினிலே
நெஞ்சமதில் நீங்கா
நினைவுகளைப் பதித்துவிட்டு
பாசம் காட்டிய உறவுகளை
பரிதவிக்க வைத்துவிட்டு
மறைந்தாயே

அவரது பிரிவரல் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

தகவல்: 157/1 சாரங்கா நகைமாடம்
கஸ்தூரியர் வீதி,
உரிமையாளரும், ஊழியர்களும்

## மரண அறிவித்தல்



**அமரர் அன்னலிங்கம் விஜயகுமாரி**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் பரவைக்குளம் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலிங்கம் விஜயகுமாரி (விஜயா) நேற்று முன்தினம் (17.01.2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி-பொன்னம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் அன்னலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் பிரசாத் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கிரிசாத் (மிராஜ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிந்துஜாவின் (பிரான்ஸ்) அன்புமாமியாரும் கிரித்திக்கின் பாசமிகு பேர்த்தியும் மைனாவதி, தர்மாவதி, மதுராம்பிகை, ஸ்ரீரங்கநாதன் யோகநாதன், உதயகுமாரி, சுசிலாம்பிகை, கோபிநாதன், சுபாஷினி ஆகியோரின் சகோதரியும் பூபாலசிங்கம், தனபாலசிங்கம், சிவலிங்கம், செல்வராணி, திருச்செல்வம், சண்முகலிங்கம், சந்திரமலர், சுசிகலா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2025) ஞாயிற்றுகிழமை பிற்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
பரவைக்குளம்
திருநெல்வேலி

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 12 . 1961



மறைவு 18 . 01 . 2025

**செல்வி சந்திரசேகரம்பிள்ளை சிவானந்தவல்லி (B.Com, H.D.p Management)**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ், கனகரத்தினம் ம.ம.வித்தி,
வவுனியா தமிழ் மகாவித்தியாலயம்,
யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் வித்தியாலயம்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சந்திரசேகரம்பிள்ளை சிவானந்தவல்லி அவர்கள் நேற்று (18.01.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம்பிள்ளை - அன்னலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட மகளும், Dr.நீலாயதாட்சி, காலஞ்சென்ற செல்வி பராபரை காயாரோகணன் (ஓய்வு பெற்ற தொழில்நுட்பவியலாளர், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் சகோதரியும், பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற மாவட்ட மருந்தாளர்), நபோநிதி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் மைத்துனியும், Dr.அரவிந்தன் (யாழ் போதனா வைத்தியசாலை), சுதர்சன் (Australia), சிவதர்சன் (UK), லவலோஜன் (பொறியியலாளர்) ஆகியோரின் சிறியதாயும், Dr.சௌமி (யாழ் போதனா வைத்தியசாலை), Dr.சௌஜா (யாழ் போதனா வைத்தியசாலை), கஜானன் (பொறியியலாளர்), சௌஜந்தி (விவசாய முகாமைத்துவ மாணவி) ஆகியோரின் அத்தையும், Dr.லோஜிதா, கலைவதனி (UK), சுதர்சினி (Australia) ஆகியோரின் மாமியும், ஆருக்ஷி, ஆஹர்ஷி, சுவாஸ்தி, சாருஜன், ஷாஷ்வி, ஆத்மி, அகிஷா, தளிர்விழி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் நாளை (20.01.2025) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

228/2 சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

(CS/57263) J-1

தகவல்:
Dr.பா.அரவிந்தன்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திடீரெனப்...

பெயர்மாற்றும் சம்பிரதாய நிகழ்வு நேற்று நடைபெற்றது. புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோர் இணைந்து பெயர்மாற்றத்தை டிஜிற்றல் திரைமூலம் செய்தனர்.

நிகழ்வில் யாழ். மாநகரசபை ஆணையாளர் கிருஸ்னேந்திரன், யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர்கள், சமயத்தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலாசார மத்திய நிலையம் இந்தியாவின் நிதிப் பங்களிப்புடன் கட்டிமுடிக்கப்பட்டு யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையம் என்ற பெயருடன் திறந்துவைக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில், தற்போது இந்தக் கலாசார மத்திய நிலையத்தில் பெயரில் இருந்த 'யாழ்ப்பாணம்' தூக்கப்பட்டு, திடீரென 'திருவள்ளுவர் கலாசார நிலையம்' என மாற்றப்பட்டுள்ளது. தமிழுக்கு தொண்டாற்றிய திருவள்ளுவரைக் கௌரவிக்கும் வகையிலேயே இந்தப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இலங்கைக்கான இந்தியத் தூதுரகம் தெரிவித்துள்ளது. (அ-எ-125-20)




## ஆதரவளித்த...

இவ்வாறு தெரிவித்துள்ளார் புத்தசாசன சமய மற்றும் கலாசார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி.

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தின் பெயரை, திருவள்ளுவர் கலாசார மத்திய நிலையம் என்று பெயர்மாற்றும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- வடக்கில் நாம் எதிர்பாராத ஆதரவைப் பெற்றிருக்கின்றோம். மூன்று எம்.பி.க்களை யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக நாம் பெற்றிருக்கிறோம். தமிழ் மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் நாங்கள் நிச்சயம் நிறைவேற்றுவோம்.

எமது ஆட்சியில் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்கும் என்பதற்கான முதல் அறிகுறியாகவே வடக்கில் தேசிய பொங்கல் விழா ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை எமது அரசாங்கம் ஆரம்பித்திருக்கின்றது. எம் மீது நம்பிக்கை கொண்டு எமக்கு வாக்களித்த தமிழ் மக்கள் நிச்சயம் ஏமாற்றப்படமாட்டார்கள் - என்றார். (அ-எ-26)

## தெல்லிப்பழையில்...

தேவஸ்தானம் ஆகியன இணைந்து இந்தப் பொங்கல் விழாவை ஏற்பாடு செய்திருந்தன.

காலை 7.30 மணிக்கு சமய வழிபாடுகளுடன் விழா ஆரம்பமாகியது. அதன் பின்னர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிவரை ஆன்மிக விழிப்புணர்வு நடைபயணம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து யூனியன் கல்லூரியில் கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன.

அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தலைமையில் நடந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ், கடற்றொழில் மற்றும்நீரியல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகரன்,பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்புப் பிரதி அமைச்சர் சுந்திரலிங்கம் பிரதீப், உட்படப் பலர் கலந்துகொண்டனர். (அ-எ-27)

## கட்டைக்காட்டில்...

மிதவையைக் கரைக்குக் கொண்டுவரும் நடவடிக்கையை கடற்படையினர் மேற்கொண்டிருந்தனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கில் கடற்கரைகளில் பல பொருள்கள் கரையொதுங்கியுள்ளன. தற்போது நிலவும் கடும் காற்றுடன் கூடிய காலநிலையால் இவை கரையொதுங்கியிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-27)

## முன்னர்...

அரசியல் தீர்வு தொடர்பாக ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டங்களைத் தொடர்ச்சியாகக் கொண்டு செல்வதற்காக 7 பேர் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கட்சிக்கு எதிரான வழக்கு விடயத்தில் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய விரைவாக வழக்குகளை முடித்துவைப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்பை நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை வலியுறுத்துவது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவஞானம், இரா.சாணக்கியன், மருத்துவர் ஸ்ரீநாத், ஸ்ரீநேசன், குகதாசன், கோடீஸ்வரன், து.ரவிகரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், உறுப்பினர்களான சயந்தன், பீற்றர் இளஞ்செழியன், யோகேஸ்வரன், சேயோன் ஆகியோர் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தனர். (அ-எ-இ)

## 'ஆம்பருடன்'...

58 வயதான ஒருவரே குருநகர்ப் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 465 கிராம் ஆம்பர் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், அதன் பெறுமதி சுமார் 20 லட்சம் ரூபா என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-26)

## முன்பகையால்...

2022ஆம் ஆண்டு நடந்த சம்பவம் தொடர்பான முன்பகை காரணமாக கடந்த பொங்கல் தினத்தன்று 22 வயது இளைஞன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்கப்பட்ட இளைஞன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தநிலையில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இதுதொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

விசாரணைகள் மேற்கொண்ட கோப்பாய் பொலிஸார், 23 வயதான இளைஞர் ஒருவரை நேற்றுக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபரை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. இன் ...

ஒருவரின் மகன் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் ஆறு பேர் தேடப்பட்டு வருகின்றனர் என்றும், விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## யாழில்...

றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் இருவர் இராணுவப் புலனாய்வாளர்கள் என்று தெரியவருகின்றது.

**நூதனமாகக் கொள்ளை**

சில நாள்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில், கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக்கடை ஒன்றிலேயே இந்த நூதனக்கொள்ளை நடந்திருந்தது.

நகைக்கடையொன்றுக்குச் சென்ற குழு ஒன்று தங்களை ரி.ஐ.டியினர் என்று அடையாளப்படுத்திக்கொண்டதுடன், விசாரணை என்ற போர்வையில் கடையில் இருந்த 30 லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய யாழ்ப்பாணம் மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்கவின் வழிகாட்டலுக்கு அமைய, யாழ்ப்பாணக் குற்ற விசாரணைப் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி கலும் பண்டார தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

**சந்தேகநபர்கள் கைது**

கண்காணிப்புக் கமராப் பதிவுகள் மற்றும் விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர்கள் இனங்காணப்பட்ட நிலையில் பிரதான சூத்திரதாரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் இருந்து ஒருதொகைப் பணம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பிரதான சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கொள்ளைக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் வாகனச்சாரதி உட்பட மூவர் கண்டியில் வைத்தும், இருவர் கொழும்பில் வைத்தும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் இராணுவப் புலனாய்வாளர்கள் என்றும், மற்றுமொருவர் தெற்கு அரசியல் கட்சியொன்றில் பிரமுகர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கைதுசெய்யப்பட்டவர்களை யாழ்ப்பாணம் கொண்டுவந்து விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-26)

## முன்னாள்...

கடந்த வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர். இரட்டைக்கொலை தொடர்பான வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்துக்கு வந்த இருவர் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது. இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் முற்பகை காரணமாக நடைபெற்றிருந்தது என்று கூறப்பட்ட நிலையில், விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. விசாரணைகளின் அடிப்படையில் நேற்று இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் முன்னர் இராணுவத்தில் பணியாற்றியவர்கள் என்றும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. கைதுசெய்யப்பட்டவர்கள் கூலிக்காக இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்று முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-எ-26)

## நெடுந்தாரகைக்கு...

நங்கூரத்தைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விகோரலை வெளியிட்டிருக்கின்றது வீதி அபிவிருத்தி அதிகார சபை. கடந்த வருட இறுதியில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக நெடுந்தாரை படகின் நங்கூரம் கடலோடு அடித்துச் செல்லப்பட்டது. அதைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று கடற்படை ஊடகப் பேச்சாளர் கடந்தவாரம் தெரிவித்திருந்தார்.

இதுவரையில் அந்த நங்கூரம் கண்டுபிடிக்கப்படாத நிலையில், வீதி அபிவிருத்தி அதிகாரசபை புதிய நங்கூரத்தைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

சுமார் ஒரு மாத காலப்பகுதிக்குள் நெடுந்தாரகைப் படகின் நங்கூரம் கொள்வனவு செய்யப்பட்டு, படகுச்சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை 'பயணிகள் சேவையில் ஈடுபடும் படகுகள் பழுதடைந்ததால் கடந்தகாலங்களில் நாங்கள் பாதிக்கப்பட்டிருந்தோம். தற்போது நெடுந்தாரகைப் படகு இயங்குநிலையில் இருந்தாலும், நங்கூரம் இன்மையால் தரித்துவிடப்பட்டுள்ளது. தொடர்ந்து நாங்கள் போக்குவரத்தில் நெருக்கடிகளைச் சந்தித்துவருகின்றோம்' என்று நெடுந்தீவுப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (அ-எ-125)

## புங்குடுதீவில்...

ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடந்த 13ஆம் திகதி வீட்டில் இருந்து வெளியே சென்ற இவர், வீட்டுக்குத்திரும்பாதநிலையில் உறவினர்கள் அவரைத் தேடியுள்ளனர். அவர் கடந்த வியாழக்கிழமை அந்தப் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

குளத்துக்கு அருகே அவரது சைக்கிள் மற்றும் ஆவணங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு சுகாதார சேவை திட்டங்கள் மீளாய்வுகள்

யாழ்ப்பாணம், ஜன. 19

வட மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் மீளாய்வுக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது வடக்கில் வினைத்திறனுடன் செயற்படாத மாங்குளம், கிளிநொச்சி, பருத்தித்துறை மருத்துவமனைகளில் வெளிநாட்டு நிதியுதவியில் அமைக்கப்பட்ட சிறப்புச்சிகிச்சை நிலையங்களை விரைவில் இயக்குவதற்கு சாதகமான நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டன. சுற்றுலாவிகளை இலக்குவைக்கும் வகையில் சுதேச மருத்துவத் திணைக்களத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துவது குறித்தும் கருத்துகள் பெறப்பட்டன. கூட்டத்தில் வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பிரதம செயலர் இ.இளங்கோவன், சுகாதரத் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவர் வி.பி.எஸ்.டி.பத்திரண, நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்புத் திணைக்கள ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையாளர் மருத்துவர் தி.சர்வானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25-27)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் இசையாசிரியர் திருமதி ஜெயபாரதி கௌசிகன் குழுவினரின் தெய்வீக இன்னிசை விருந்து இடம்பெற்றது. (ச- 25-66)





வரணிக் குடும்ப முன்பள்ளிகளின் கற்றல் உபகரணக் கண்காட்சி நிகழ்வு வரணிக் குடும்ப முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி லோகிதன் கேதிகா தலைமையில் வரணி இயற்றாலை ரட்ணா முன்பள்ளியில் அண்மையில் இடம்பெற்றது. (ச-25-159)



நயினாதீவு மகா வித்தியாலயத்தில் பொங்கல் விழா அதிபர் தலைமையில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது. (ச-25,9)

## சூரியப்பொங்கலும் உழவர் கௌரவிப்பும்

மன்னார், ஜன.19

மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் சூரியப்பொங்கலும், உழவர் கௌரவிப்பு நிகழ்வும் மன்னார் மாவட்டச்செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. நிகழ்வில் மேலதிக மாவட்டச் செயலாளர் பரந்தாமன், மாவட்டச் செயலகப் பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-25-56)

**வேலைக்கு ஆட்கள் தேவை**

எமது நிறுவனத்திற்கு கணக்கியல் துறையில் அறிவுடைய, கணினி அறிவுடைய கணினி வடிவமைப்பாளர் (Graphics Designer with Accounting Knowledge) மற்றும் Technical Officer (T.O) - Civil தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். (CS/57260) J-1

**076 760 0403, 077 966 9498**

**வேலையாள் தேவை**

இல. 246, நாவலர் வீதி, இலுப்பையடிச் சந்தியில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு வேலையாள் தேவை.

தொடர்புகொள்ளவும் அல்லது நேரில் வரவும்

தொடர்பு: 077 3528 986
021 2226 830

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
Whats app:-
**+61 421 290 240**
(CS/57250) J-1



இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தின் தைப்பொங்கல் விழா அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாபூஷணம் இ.க.கமலநாதன் கலந்து சிறப்பித்தார். (ச-25-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்புக்கள்

சிங்கள வகுப்புக்கள்
பண்டத்தரிப்பில் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு:-
077 938 9201, 076 802 1632
(CS/57212) J-1

## காணி விற்பனைக்கு

சங்கானை அராலி வீதியில் 4 பரப்புக் காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :- Srikanth
076 788 2524, 077 616 7509
(CS/57240) J-1

## காணி உடன் விற்பனைக்கு

காங்கேசன்துறை (KKS) நகுலேஸ்வரா வீதியில் பஸ் சேவை நடைபெறும் வீதி முகப்புடன் நிலப்பரப்பு 10 காணி (வீடுகள், களஞ்சிய அறைகள், கடைகள், யாட் கட்டுவதற்கு உகந்த இடம்) உடன் விற்பனைக்கு உண்டு.
பார்வையிடும் நேரம்- காலை 09.00 -05.00 மணி வரை
தொடர்புகளுக்கு: 076 449 9868
(CS 2314) P-1

## வேலையாட்கள் தேவை

யாழ். நெல்லியடிப் பகுதியில் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் Beauty Spa ஒன்றிற்கு முன் அனுபவம் உள்ள PEDICURE and MANIQRE செய்யக்கூடியவர்கள் தேவை.
தங்குமிட வசதி செய்து தரப்படும்.
தொடர்பு:- 076 444 9377
(CS/57237) J-1

## கார் விற்பனைக்கு

Toyota - Corrolla EE- 100 வகையைச் சேர்ந்த பாவிக்கப்பட்ட வெள்ளை நிற கார் விற்பனைக்கு உண்டு. விலை 23 லட்சம்.
தரகர் தேவையில்லை
தொடர்பு:- 076 342 1246
(CS/57244) J-1

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் (V) சேர்ந்த U.K இல் பிறந்த 28 வயதுடைய 180cm உயரமுடையவரும் BSc கொம்பியூற்றர் சயன்ஸ் பட்டதாரியுமான பிரிட்டிஸ் ஏர்வேஸ், லண்டன் கீத்துறு விமான நிலையத்தில் உயர்பதவி வகிக்கும் மகம் நட்சத்திர முடைய மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
U.K இல் வசிப்போர் விரும்பத்தக்கது. (CS/572486) J-1
பேரன் - 074 372 8215 (இலங்கை)
மாமன் - 0044 755 124 5890 (U.K)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நல்லூரை அண்மித்த பகுதியில் குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை.
077 919 1529
(CS/57220 A) J-1

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நல்லூரை அண்மித்த பகுதியில் அரச சார்பற்ற நிறுவனத்திற்கு அலுவலக தேவைகளுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
077 919 1529
(CS/57220 B) J-1

## இடியப்ப பெக்டரி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவாந்துறை வீதியில் 10 நிமிடத்தில் 425 இடியப்பம் அவிக்கக் கூடிய ஸ்ரீமரும், உபகரணங்களும், இடியப்பம் பிழியும் மெசினும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 077 805 4215
(CS/57242) J-1

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணத்தில் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகளை செய்வதற்கு வீட்டு வேலை யாள் தேவை. அனுபவமுள்ள பெண்கள் விரும்பத்தக்கது. கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதி களும் உண்டு.
40 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது
077 774 3185

## அறை வாடகைக்கு

யாழ். செயலகத்தில் இருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் A9 வீதி (கண்டி வீதி, பெந்தோகொஸ்த மிசனுக்குமுன்னால்) தனியான குளியல் அறையுடன் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. பொது விறாந்தையும் பாவிக்க முடியும். வாடகை பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.
076 291 3995
(CS/57227) J-1

## காணி வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்புகொள்ள வேண்டாம்.)
தொடர்புக்கு:- 077 614 6434
(CS/56903) J-1

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்

பிறப்பு 04 . 09 . 1983

இறப்பு 20 . 12 . 2024



கடந்த 20.12.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சிவஞானம் கபிலன்

(சமுர்த்தி அபிவருத்தி உத்தியோகத்தர் - ஊர்காவற்றுறை)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.01.2025) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் பாலாவோடை அந்தியேட்டி மடத்திலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு அதேதினத்தில் அவரது இல்லத்திலும் முற்பகல் 11.00 மணியளவில் "காரைநகர் திக்கரை இந்து இளைஞர் மன்றத்தில்" நிகழ இருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் எமை பிரிந்த வேளையிலே ஓடோடி வந்த நண்பர்கள், உறவினர்கள் அன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் வைத்தியம் செய்த வைத்தியர்கள் மற்றும் தாதியர்களுக்கும், வெளிநாட்டு நண்பர்கள் மற்றும் களபூமி இந்து இளைஞர் மன்றம், மற்றும் பொது அமைப்புகள் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் மற்றும் அவருடன் பணி புரிந்த சக உத்தியோகத்-தர்கள், இறுதி நிகழ்வில் இரங்கல் உரை நிகழ்த்தியவர்கள், வர்த்தகர்கள், தொலைபேசியில் இரங்கல் தெரிவித்தவர்கள், இணையதளம் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள், மலர்வளையம் சாத்தியவர்கள், துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் மூலம் தங்கள் இரங்கலை தெரிவித்தவர்கள், இடர்வேளையறிந்து தேநீர் மற்றும் உணவு வழங்கியவர்கள், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள், இறுதிக்கிரியைகள் மற்றும் சபடீகரண கிரியை நிறைவேற்றிய குருக்கள்கள், பெரியோர்கள் பல வழிகளில் உதவிய நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விளானை களபூமி,
காரைநகர்.
(CS/57209) J-1
குடும்பத்தினர்

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ (V) குடும்பம், 1991 ல் பிறந்த கேட்டை நட்சத்திரம், 2ல் செவ்வாய், 37 கிரக பாவமுடைய சுயதொழில் புரியும் மணமகனுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மணமகள் தேவை.
077 317 4582
(CS/57232) J-1

## சாரதி தேவை

தாவடி, கொக்குவிலில் இயங்கிவரும் பிரபல்யமான அரிசியாலை ஒன்றிற்கு சாரதி தேவை. (பாரவூர்தி சாரதி)
076 096 9728
(CS/57214) J-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழு பிள்ளையார் கோவில் முன் வீதியில் 38 பரப்புக்காணி விற்பனைக்குண்டு

- ஆனந்தகானம் வீதி முகப்புடன்
- பலாலி வீதியிலிருந்து 1Km தூரம்
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஊரெழு கணேசா வித்தியாலயம் 1Km தூரம்
- செம்மண், நன்னீரூற்று, நிலப்பரப்பு
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- 1 பரப்பின் விலை பதினைந்து லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் (1,550,000)
- பார்வையிடும் நேரம் காலை 08.00 முதல் மாலை 06.00 வரை

கோல்டன் ரியல் ஸ்ரேட்(Pvt) Ltd
ஓனர் - T. Kalaithashan
(CS/57234) J-1
தொடர்பு: 076 069 1105
076 298 1105
077 468 3354

உயர்வகை பல் வைத்திய சேவைக்கு....
For Quality, Professional Dental Care





INTERNATIONAL DENTAL CARE
professional Dental Care in Sri Lanka
INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD

**Colombo Branch**
N0. 79/9, W.A.Silva Mw,
Wellawatta, Colombo - 06,Sri Lanka.
Tel : + (94) 11 2507070,
Mob : + (94) 77 0139372, + (94) 77 0139376
W.App : + (94) 76 5224273

**Vavuniya Branch**
Raaj Medical Lab.
No:10, Bazaar Street, Vavauniya, Sri Lanka.
Tel : + (94) 24 2221577
Mob : + (94) 77 0139374
W.App : + (94) 77 059 5221

**Jaffna Branch**
N0. 84, Stanly Road,
Jaffna, Sri Lanka.
Tel : + (94) 21 2220833
Mob : + (94) 77 0031547
W.App : + (94) 77 003 1548

Web : www.internationaldentalsrilanka.com
Email : internationaldentalcare@gmail.com

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இருக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

வாழ்வுக்கூத்தை நாம் ஆட வாழ்கிறோம்
வலிமை நோக்கி நாம் பயணம் ஆடுகிறோம்
உயிர்ப்பு மீண்டும் நிகழ வேண்டுமே
உணர்வும் ஆவியும் இழைய வேண்டுமே

—இ.முருகையன்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 தை 05 ஞாயிற்றுக்கிழமை (19.01.20 ... 36

# குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நெடும்பயணம்



சோ.பத்மநாதன்

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகப் பயணம் ஆறு தசாப்தங்களைக் கண்டது. இந்த யாத்திரையில் சொர்ணலிங்கத்தின் நேர் நாடகங்கள் (direct plays) இப்ஸனிய யதார்த்தம், மோடியுற்ற நாடகம் (stylized drama) மற்றும் ப்றெஃசற்றின் காவிய அரங்கு (epic theater) எனப் பல நாடகப் பள்ளிகளூடு அவர் பயணித்திருக்கிறார். சலியாது பரிசோதனை முயற்சிகளில் ஈடுபடும் ஒருவர் ஒரு கோட்பாட்டுக்குக் கட்டுப்படுவதில்லை என்பது சண்முகலிங்கத்துக்குப் பொருந்தும்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் அவர் கற்ற நாடக டிப்ளோமா (1976) அவர் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை எனலாம். அங்கு அவர் சந்தித்த தம்ம ஜாகொட, தர்மசிறி பண்டாரநாயக்க, ஹென்றி ஜயஸேன முதலிய கலைஞர்களின் சகவாசம் அவர் பார்வையை விசாலப்படுத்தியது.

தான் கற்ற நுட்பங்களைப் பிரயோகித்துப் பார்க்கக்கூடிய வாய்ப்பை யாழ்ப்பாணத்துப் பாடசாலைகள் சண்முகலிங்கத்துக்கு வழங்கின. சிதம்பரநாதன் அவருடன் சேரவே, அந்தக் கூட்டு வெற்றிகரமாகத் தொழிற்பட்டது. இக்கட்டத்தில் 'சண்' அரங்கேற்றிய நாடகங்கள் ஆண் பெண் சமத்துவம், சீதன வழக்கம், கல்வித்துறையில் தனியார் கல்வி நிலையங்கள் (Tutories) ஏற்படுத்தும் பாதிப்பு முதலிய பிரச்சினைகளை மையப்படுத்தின. சண்முகலிங்கத்தினது இயக்கம் ஒரு தனி மரமல்ல. இதேகாலத்தில், மௌனகுரு மோடிப் படுத்தப்பட்ட (Stylized) நாடகங்களைப் பயன்படுத்திக் கொண் டிருந்தார். பாலேந்திரா மேலைத்தேய நாடகங்களை (மொழிபெயர்த்து) மேடையேற்றிக் கொண்டிருந்தார். நிர்மலாவும் சில நாடகங்களை மொழிபெயர்த்திருந்தார். சுந்தரலிங்கம் அபத்த நாடகத்தை அறிமுகப்படுத்தினார். பல தசாப்தங்களாக நடிகமணி வைரமுத்துவின் இசை நாடகங்கள் மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தன. பேராசிரியர் சு. வித்தியானந்தனுடைய முயற்சியால் அறுபதுகளில் 'கூத்து' புதுவாழ்வு பெற்றது.

1983ல் நிகழ்ந்த இனச்சங்காரத்தின் பின், இலங்கை இயல்பு நிலைக்கு மீளவில்லை. சட்டத்தை மதிக்கும், அமைதியை விரும் பும், ஈழத்தமிழர்கள், இளைஞர்கள் ஆயுதம் ஏந்திய போது அதிர்ச் சியடைந்தனர். போராட்டத்தை அங்கீகரிக்கப்பின்னடித்தனர். ஆனால் இளைஞர்களோ 'சிங்களத்தலைவர்களோடு தமிழ்த்தலைவர்கள் கைச்சாத்திட்ட எல்லா ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்பட்டதைச் சுட்டிக்காட்டி தம் போராட்டத்தை நியாயப்படுத்தினர். தனிநாடு ஒன்றே தமிழர் தன்மானத்துடன் வாழவழி செய்யும் என்று சாதித்தனர்.

பதிலுக்கு அரச படைகள் கொடூரமான ஒடுக்குமுறைகளைக் கையாண்டன. மக்கள் இருசாராருக்குமிடையில் அகப்பட்டுக்கொண்டனர். உயிரிழப்பு, சொத்தழிவு, சிறைவாசம், இடப்பெயர்வு, புலப்பெயர்வு என அவலங்கள் தொடர்ந்தன. இவை தாம் "மண் சுமந்த மேனியர்" மற்றும் போர்க்கால நாடகங்களுக்குப் பின்புலம். "கோவில் வீதிகளிலும், பாடசாலை மண்டபங்களிலும் அரங்கேறிய இந்நாடகங்கள் மக்களுடைய உத்தரிப்புகளை, நிச்சயமற்ற வாழ்வினதும் சங்கடங்களினதும் அணிவகுப்பாகச் சித்தரித்தன" என்கிறார் கா. சிவத்தம்பி. எரிபொருள் தடை, மின்தடை, பத்திரிகைத் தாளுக்குத் தடை என அல்லாடிய மக்களை இந்நாடகங்கள் தாம் களிப்பூட்டின. சாமானிய மக்களுக்கு அச்சத்திலிருந்தும் பதற்றத்திலிருந்தும், அழுத்தங்களிலுமிருந்தும் ஆறுதல் தேவைப்பட்டது. குரலிழந்திருந்த மக்களின் சார்பில், சண்முகலிங்கமே, தன் நாடகங்கள் மூலம், உரத்துக் குரல் கொடுத்தார்.

பிள்ளைகள் சொல்லுக் கேட்கிறார்களில்லை என பெற்றோர் கவலைப்பட்டனர். படிப்பிலும் அவர்கள் கவனம் செலுத்தவில்லை குடும்பப் பொறுப்புக்களைக் கவனிக்காமல், ஆயுதக் குழுக்களின் அணியில் சேரலாயினர்.

இந்த வழியைத் தெரிவுசெய்யாதவர்கள், போரால் குழம்பிய நாட்டைவிட்டுத் தப்பி (வெளிநாடுகளுக்கு) ஓடினர். பெற்றோர் காணி பூமிகளை ஈடுவைத்து, நகைகளை விற்று தம் பிள்ளைகளை ஐரோப்பிய நாடுகளுக்கும் வட அமெரிக்காவுக்கும் அனுப்பினர். இந்தச் சூழ்நிலைகள் சண்முகலிங்கத்தின் நாடகங்களுக் குப் பின்புலங்களாயின.

'எந்தையும் தாயும்' நாடகம் பிள்ளைகள் வெளிநாடு போக, தனிமையில் வாடி அன்புக்காக ஏங்கும் பெற்றோர்கள் பற்றியது. வீதித் தடையூறாகப் பயணிக்கையில் காணாமற் போன ஒருவனின் மனைவியின் அவஸ்தை பற்றியது 'அன்னை இட்ட தீ'. நாடகம் பல ஆண்டுகளாகியும் அவளைப் பற்றிய செய்தி இல்லை. வரு வானா? கொல்லப்பட்டுவிட்டானா? இந்தப் பெண் தாலி அணியலாமா, பொட்டை அழிக்க வேண்டுமா, அவள் சுமங்கலியா, விதவையா? நிச்சயமில்லை.

'வேள்வித் தீ' ஓர் அவல நாடகம். நாயகி வாசுகி வல்லுறவுக்குள்ளானவள். அவள் போரால் பாதிக்கப்பட்டவர்களை ஆற்றுப்படுத்தும் உளவள ஆலோசகர். அவள் கணவன் கூட, ஓர் உணவள ஆலோசகர். ஆனால் தன் மனைவி மாசிலாதவள் என ஏற்றுக்கொள்ள அவனால் முடியவில்லை என்பது முரண்நகை.

'நரகொடு சுவர்க்கம்" மனிதனுக்குத் தன் வீட்டின் மீதுள்ள பற்று தல் பற்றியது. இதன் பின்புலம் 1995 ஒக்ரோபர் 30இல் நிகழ்ந்த வலிகாமம் இடப்பெயர்வு. அப்பொழுது வட இலங்கை புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதில் முனைப்பாகச் செயற்பட்டனர். அதற்காக "றிவிறெஸ" நகர்வைத் தொடங்கினர். படையை எதிர்கொள்ளமுடியாது எனக் கணித்த புலிகள் 500,000 மக்களை குடாநாட்டிலிருந்து செம்மணி ஊடாக வெளியேற்றினர். பின்னர் தென்மராட்சியிலிருந்து கிளாலியூடாக, மீன்பிடி வள்ளங்களில் வன்னிக்குச் செல்வதே இலக்கு.

எல்லோரும் வன்னிக்குப் போகவில்லை. வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமமிடையே காலங்கடத்திய ஒரு பகுதியினர் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குத் தத்தம் வீடுகளுக்கு மீண்டனர். என்ன காரணம்? வீடு வளவு மீது கொண்ட பற்று. ஒருவர் தான் தவழ்ந்த, ஓடி விளையாடிய மண்மீது. நீராடிய கிணற்றடி மீது, தலை சாய்த்த திண்ணை மீது, உலாப்போந்த தெருமீது, கும்பிட்ட கோயிலின் மீது கொண்ட பற்றுதல் லேசானதல்ல, கட்டையிலும் வேகாது.

குழந்தை சண்முகலிங்கத்தின் கலையாக்கம் பற்றிக் குறிப்பிட்டாகவேண்டும். நாட்டார் பாடல்கள். பாரதி கவிதைகள், நந்தனார் கீர்த்தனைகளையெல்லாம் ப்றெஃச்ற்றிய பாணியில் அவர் பயன் படுத்துவார். ஆனால் அவர் ஆத்மாவின் உள்நின்றியங்குவது - நெஞ்சின் மிக்கது - திருவாசகமே. அவருடைய நாடகங்களின் தலைப்புக்கள் பெரும்பாலும் திருவாசகத் தொடர்களே.



இச்சிறுகட்டுரையை மன்செஸ்ரர் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் ஜேம்ஸ் தொம்ப்ஸன் அவர்களுடைய கூற்றோடு நிறைவு செய்கிறேன்.

"அவர் (சண்முகலிங்கம்) பல அரங்க மரபுகளை உள்வாங்கியுள்ளபோதும், எந்த ஒரு மரபின் பணியாளன் ஆகவும் இருந்ததில்லை.

அவருடைய நாடகங்கள் அவ்வக் கணங்களின் தேவைகளிலிருந்து பிறந்தவை. அவர் பார்வைகள் நிகழ்காலப் புரிதல்களிலிருந்து கிளைவிடுபவை, விரிபவை. வன்முறையாலும் முரண்பாடுகளாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அவர்களுடைய பண்பாடு எவ்வளவு முக்கியம் என்பது பற்றிய ஆழமான புரிதல் அவருக்குண்டு.

(மீள்பிரசுரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளீன் சிறீலங்கா:

## பொதுக் கழிப்பறைகள்

○ நிலாந்தன்

'கிளீன் சிறீலங்கா' தொடர்பாக கடந்த வாரம் நான் எழுதிய கட்டுரையை வரவேற்று ஒரு நண்பர் கருத்துத் தெரிவித்திருந்தார். ஸ்ரீலங்காவை ஓரளவுக்காவது கிளீன் பண்ணக்கூடிய இடம் சுற்றுச்சூழல் விவகாரங்கள்தான் என்பதை ஏற்றுக்கொண்ட அவர் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார். நீண்டதூரப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களை சிரம பரிகாரத்துக்காக நிறுத்தும் இடங்களில் உள்ள சுகாதாரக் கேடுகளை அவர் சுட்டிக்காட்டினார். குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான போக்குவரத்து வழியில் பேருந்துகள் இடைநிறுத்தப்படுகின்ற உணவகங்களில் உள்ள கழிப்பறை வசதிகளைக் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டிய கட்டாயத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

நண்பர் அதை எனக்குக் கூறுவதற்கு முன்னரே நாட்டின் தலைவராகிய அநுர, கிளீன் ஸ்ரீலங்காவை அறிமுகப்படுத்தும் பொழுது நாடாளுமன்றத்தில் பின்வருமாறு உரையாற்றியிருந்தார்.....“நம் நாட்டுப் பெண்கள் கழிப்பறைக்குச் செல்ல இந்த நாட்டில் சுத்தமான கழிப்பறை அமைப்பு இருக்கிறதா என்பதும் கேள்விக்குறியாகும். தூர இடங்களில் இருந்து கொழும்புக்கு வரும் சில பெண்கள் வீடு வரும்வரை தண்ணீர் அருந்துவதில்லை. சுத்தமான கழிப்பறைக் கட்டமைப்பொன்று இல்லாமையே அதற்குக் காரணமாகும். கழிப்பறைக் கட்டமைப்புக் கட்டப்பட்டாலும், சமூகத்தில் நல்ல மனப்பான்மை கட்டியெழுப்பப்படவில்லை. சாதாரண மக்களுக்கு பொது இடமாக அன்றி அவை அழிவுகரமான இடமாக மாறியுள்ளன. இதனால் என்ன தெரிகிறது? இது எமது நாட்டு ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவிடம் காணப்படுகின்ற அணுகுமுறையாகும். எனவே, தூய்மையான இலங்கை வேலைத் திட்டத்தின் ஊடாக அவ்வாறான மனோபாவத்தையும் மாற்ற எதிர்பார்க்கின்றோம்.”

அநுர அவ்வாறு பேசியபோதுதான் எனக்கு ஒரு விடயம் தெரிந்தது என்னவென்றால், தமிழ்ப் பெண்களைப் போலவே சிங்கள, முஸ்லிம் பெண்களுக்கும் உள்ள பொதுவான பிரச்சினை அதுவென்று. யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணப்போக்குவரத்து நேரம் கிட்டத்தட்ட ஏழு மணித்தியாலம். இக்காலப் பகுதியில் பெரும்பாலான பெண்கள் நீர் அருந்துவதில்லை. ஏனென்று கேட்டால் இடையில் அவர்கள் சிறுநீர் கழிப்பதற்காக நிறுத்தும் இடங்களில் சிறுநீர் கழிக்கமுடியாது. அவை அசுத்தமாகவும் அருவருப்பாகவும் இருக்கும். அந்த இடத்தை நெருங்கும் பொழுதே துர்வாடை வீசும். அந்த இடத்தில் கால் வைப்பதற்கே கூசும். முறிகண்டியில் கட்டணம் செலுத்தும் கழிப்பறைகள் உண்டு. அங்கேயும் நிலைமைகள் பாராட்டும் அளவுக்குச் சுகாதாரமாக இல்லை.

பொதுக் கழிப்பறைகளைத் தொடர்ச்சியாகக் கழுவி, துப்புரவாகப் பேண மாட்டார்கள். அந்த அசிங்கத்துக்குள் போனால் சகல நோய்களும் தொற்றிக்கொண்டு விடும் என்ற அச்சம் ஏற்படும். எனவே சிறுநீர் கழிப்பதற்கு ஒரு நரகத்துக்குள் போவதை விடவும், சிறுநீரை 6 மணித்தியாலங்களுக்கு அடக்கி கொண்டிருப்பதை விடவும், நீரைக் குடிக்காமல் விடலாம் என்று ஒரு பகுதி பெண்கள் கருதுகிறார்கள். இதுவும் ஆபத்தானது. நீண்ட தூர, நீண்ட நேரப் பயணங்களில் நீரிழப்பால் உடலுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து அதிகம்.

அது சொகுசு வாகனம்தானே? குளிரூட்டப்பட்டது தானே? நீர் இழப்புக் குறைவாக இருக்கும் என்று ஒரு விளக்கம் கூறப்படலாம். அவ்வாறு சொகுசு வாகனம், சொகுசுப் பயணம் என்று கூறி அதற்குத் தனியாகப் பணம் அளவிடும் வாகன உரிமையாளர்கள் ஏன் தாங்கள் வாகனங்களை நிறுத்தும் இடங்களிலும் சொகுசான, வளமான, சுகாதார வசதிகளைக் கொண்ட கழிப்பறைகளைக் கட்டக்கூடாது?

பொதுப் போக்குவரத்து வாகனங்களை சாப்பாட்டு இடைவேளைக்காக அல்லது சிரம பரிகாரத்துக்காக எங்கே நிறுத்துவது என்பதனை பயணிகள் தீர்மானிக்கமுடியாது. வாகன உரிமையாளர்களும் சாரதிகளும்தான் அதைத் தீர்மானிக்கிறார்கள். அது வாகன உரிமையாளருக்கும் குறிப்பிட்ட சாப்பாட்டுக் கடைக்கும் இடையிலான ஒரு வணிக உடன்படிக்கை. இருதரப்புக்கும் அங்கு லாபம் உண்டு. பயணிகளை வைத்துப் பணம் சம்பாதிக்கும் இந்த இரண்டு தரப்புக்கும் பயணிகளுக்கான கழிப்பறைகளைச் சுகாதாரமாக பேணவேண்டிய பொறுப்பு உண்டு.

அவர்கள் வாங்கும் பயணச் சீட்டுக்குள் அந்தச் செலவும் அடங்குகிறது. பயணிகளின் கழிப்பறை வசதிகளை சுகாதாரமாகப் பேண வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. அதற்கும் சேர்த்துத்தான் கட்டணம் அறவிடப்படுகிறது. எனவே இந்த விடயத்தில் நீண்டதூரப் பயணங்களில் ஈடுபடும் வாகன உரிமையாளர்களுக்கும் சாரதிகளுக்கும் அவர்கள் எந்தெந்த இடங்களில் நிறுத்துகிறார்களோ அந்த இடங்களில் உள்ள உணவக உரிமையாளர்களுக்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு. இவை அனைத்தையும் நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

இந்த விடயத்தில் பெண்கள் படும் அவஸ்தை தெரிந்த ஒருவர் இப்பொழுது நாட்டின் தலைவராக இருக்கிறார். எனவே அவர் இந்த விடயத்தில் உடனடியாகக் கை வைக்கலாம். வசதியான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், தனி வாகனங்களில் பயணம் செய்கிறவர்கள் விரும்பிய, சுகாதாரமான, வசதியான இடத்தில் நிறுத்திச் சிறுநீர் கழிக்கலாம். குறைந்தது காட்டுப்பகுதிகளிலாவது வாகனத்தை நிறுத்திச் சிறுநீர் கழிக்கலாம். தென்னிலங்கை நகரங்களில் வளமான 'ரெஸ்ட்ரோரன்ட்களில்' சுகாதார வசதிகள் கூடிய கழிப்பறைகள் உண்டு. ஆனால் பொதுப் போக்குவரத்து வாகனங்களைப் பயன்படுத்தும் பெண்களுக்குத்தான் இந்தத் தண்டனை.

நாட்டில் பெண்கள் நீண்டதூரப் பயணங்களில் சிறுநீரை அடக்கிக் கொண்டு பயணம் செய்கிறார்கள் அல்லது சிறுநீர் கழிப்பதை தவிர்ப்பதற்காக நீர் அருந்தாமல் சிறுநீர்ப் பையைப் பழுதாக்குகிறார்கள் என்பது நாட்டின் வாழ்க்கைத் தரத்தை காட்டும் ஒரு குறிகாட்டி. சுகாதாரம், பால் சமத்துவம், பாதுகாப்பான பயணம் போன்ற பல்வேறு நோக்கு நிலைகளில் இருந்தும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய ஒரு விடயம்.

ஒரு நாட்டின் பொதுச்சுகாதாரக் குறிக்காட்டிகளில் ஒன்று பொதுக் கழிப்பறையாகும். மேற்கத்திய பண்பாட்டில் பொதுக் கழிப்பறைகள் பெரியவைகளாகவும் சுத்தமானவைகளாகவும் இருக்கும். அவற்றைத் தொடர்ச்சியாகப் பராமரிப்பார்கள். அவை பெருமளவுக்கு உலர் கழிப்பறைகள்தான். அவற்றைத் தொடர்ச்சியாகச் சுத்தமாகப் பேணும் ஒரு பண்பாடு அங்கு வளர்ந்திருக்கிறது. கழிப்பறைகளைப் பராமரிப்பது மட்டுமல்ல பொதுமக்கள் கழிப்பறைகளைப் பொறுப்போடு சுத்தமாக சுகாதாரமாகப் பயன்படுத்துவதும் ஒரு பண்பாடுதான். அந்தப் பண்பாடு அங்கே வளர்ந்திருக்கிறது. அது அந்தச் சமூகங்களின் சமூகத் தராதரத்தை; விழுமியங்களை, கூட்டுப் பொறுப்புணர்ச்சியை வெளிக்காட்டும் விடயங்களில் ஒன்று. ஆனால் ஆசிய ஆபிரிக்க நாடுகளில் நிலைமை அவ்வாறு இல்லை. பொதுக் கழிப்பறை என்றாலே அசுத்தமானது. அருவருப்பானது, துர்வாடை வீசுவது, இலையான் மொய்ப்பது என்ற நிலைமைதான் பொதுப்போக்காக உள்ளது. மேட்டுக்குடி அரசியல் பாரம்பரியத்தில் வராத அநுர இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றியது வரவேற்கத்தக்கது. அதேசமயம் அவர் கூறுவதுபோல நெடுந்தூரப் பயணங்களில் தமிழ் நோக்கு நிலையில், இது ஒன்று மட்டும்தான் விவகாரம் இல்லை என்று வாகன உரிமையாளர்களும் சாரதிகளும் முறைப்பாடு செய்கிறார்கள். நீண்ட தூரப் பயணங்களில் குறிப்பாக இரவு வேளைகளில் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயண வழியில் தமது வாகனங்கள் அடிக்கடி பொலிஸாரால் மறிக்கப்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். அவ்வாறு மறிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கும் நீதிமன்றத்துக்கும் அலைக்கழிக்கப்படுவதை விடவும் அவர்கள் கேட்கும் காசைக் கொடுத்துவிட்டு ஓடித் தப்புவதுதான் புத்திசாலித்தனமானது' என்று பல சாரதிகள் கருதுவதாக ஒரு பொதுவான அபிப்பிராயம் உண்டு.

இந்த நடைமுறை தமிழர்களுடைய பயண வழிகளில்தான் அதிகமாக உண்டு என்றும் தென்னிலங்கையில் ஏனைய நெடுந்தூரப் பயண வழிகளில் இந்தளவுக்குச் சோதனைகள் இல்லை என்றும் ஓர் ஒப்பீடு உண்டு. போர்க்காலங்களில் தமிழ் மக்கள் அதனை தமக்கு எதிரான கூட்டுத் தண்டனையின் ஒரு பகுதியாக விளங்கிவைத்திருந்தார்கள். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாகவும் அந்தத் தண்டனை தொடர்கிறதா? அப்படியென்றால் அதை உடனடியாக நிறுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. ஏனென்றால் நிறைவேற்று அதிகாரமுடைய அரசுத் தலைவரால் தமிழ்ச் சாரதிகளும் வாகன உரிமையாளர்களும் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் உண்மையானவையா இல்லையா என்பதனை விசாரித்து அறிவது கடினமானது அல்ல.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட ஒரு அரசாங்கமும் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஒரு தலைவரும் நினைத்தால் முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய விடயங்கள் இவை. அரசியல், பொருளாதாரத் தளங்களில் அரசாங்கத்துக்கு வரையறைகள் உண்டு. வெளி நிர்பந்தங்கள் இருக்கலாம். ஆனால் பொதுக் கழிப்பறைகள் சுகாதாரமாகப் பேணப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கும் பொது போக்குவரத்து வாகனங்கள் குறிப்பாக தமிழ் வாகனங்கள் பொலிஸாரால் அதிகம் மறிக்கப்படுகின்றனவா என்பதனை விசாரிப்பதற்கும் அரசாங்கத்தால் உடனடியாக முடியும். சிறீலங்காவை கிளீன் பண்ணக்கூடிய சாத்தியமான இடங்கள் இவை. அரசாங்கம் அதைச் செய்யுமா ?

கடந்த தைப்பிறப்பிலன்று வன்னியிலிருந்து ஒரு குடும்பம் வாகனத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்தது. முன்னிரவு வேளை. கும்மிருட்டுக்குள் நின்று பொலிஸார் மறித்தார்கள்., கள்வர்களைப் பிடிப்பதுபோல மறைவில் நின்றார்கள். அங்கே தெருவிளக்குகள் இருக்கவில்லை. பொலிஸாரிடம் 'டோர்ச் லைட்கள்' இருக்கவில்லை. பதிலாக கைபேசி 'டோர்ச் லைட்டுகளைப்' பயன்படுத்தினார்கள்.

வாகனத்தின் இலக்கத்தையும் ஏனைய விபரங்களையும் பதியவேண்டும் என்று கூறி சாரதியை இறக்கிக் கொண்டுபோனார்கள். கைபேசியின் 'டோர்ச் லைட்' வெளிச்சத்தில் பதிந்தார்கள். அப்பொழுது சாரதி கேட்டார். ஏன் உங்களிடம் 'டோர்ச் லைட்' இல்லையா? இந்தக் கைபேசி டோர்ச் லைட்டை வைத்துக்கொண்டு கள்ளர்களை எப்படிப் பிடிப்பீர்கள்?" என்று. அதற்கு ஒரு பொலிஸ்காரர் தமிழில் சொன்னார் “துப்பாக்கி வைத்திருக்கிறோம் சுட்டுப் பிடிப்போம்" என்று. கிளீன் சிறீலங்கா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...

## சர்வதேச ஈரநிலங்கள் தினம்

பெப்ரவரி 02 2025

‘எதிர்காலத்திற்காக ஈரநிலங்களைப் பாதுகாத்தல்”

உலகின் மொத்தப்பரப்பில் 6% ஈரநிலங்கள்



உலகின் 50% க்கும் மேற்பட்டோரின் பிரதான உணவுக்கான ஆதாரம் ஈரநிலங்கள்

அரிசி — 3.5 பில்லியன் மக்கள்

கடல் உணவு — >1 பில்லியன் மக்கள்

தாவர, விலங்கு இனங்களில் 40% ஈரநிலங்களில் வாழ்கின்றன

கண்ணுக்குப் புலப்படும் உயிரினங்களில் 12% ஆனவை நன்னீர் ஈரநிலங்களில் வாழ்கின்றன.



மூலம்:www.wetlandsday.org

# புலமையாளர் பதில்

**கேள்வி:** நிலத்தடிநீர் முகாமைத்துவத்தில் குளங்களின் வகிபாகம் தொடர்பாகவும் அவற்றின் புனரமைப்பு மற்றும் தூர்வாரலின் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்த முடியுமா?

(S.தர்சினி, திருநெல்வேலி)

**பதில் :** இயற்கை மனிதனால் அன்றாடம் சீண்டப்பட்ட வண்ணம் உள்ளது. அதன் விளைவாக இயற்கையின் சீற்றங்களும் அதிகரித்த வண்ணமே செல்கின்றன. இயற்கைக்கு முரணான மனித நடவடிக்கைகள், மனிதனை மட்டுமல்ல, எல்லா உயிரினங்களையுமே பாதிக்கின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டை எடுத்துக்கொள்வோமானால் பல்வேறு சூழலியற் பிரச்சினைகள் தினமும் அதிகரித்துக்கொண்டே செல்வதை நாம் காண்கிறோம். அவற்றுள் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக நிலத்தடி நீரின் தரம் கெட்டுக்கொண்டே போவதைக் கூறலாம். இவ்விடத்தில் வாழும் அனைத்து மக்களும் புரிந்துகொள்ளவேண்டிய அடிப்படைப் பாடம் யாதெனில், நிலத்தடிநீர் தான் யாழ்ப்பாணத்துக்கான உயிர்நாடி என்ற உண்மை நிலையாகும். குழாய்நீர் மூலம் நீர் விநியோகிக்கும் எத்தகைய திட்டங்கள் வந்தாலும் அத்திட்டங்களின் மூலம் யாழ்ப்பாண நீர் தேவையின் ஒரு பகுதியை மட்டுமே பூர்த்திசெய்ய முடியும். அண்ணளவாக, அப் பகுதி 5% எனின் மிகுதி 95% வீத நீர்த்தேவைகளை நிலத்தடிநீர் மூலம் மட்டுமே பூர்த்திசெய்ய முடியும் என்பது புலனாகிறது.

நமது முன்னோர்கள் நிலத்தடி நீரை மிகவும் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து, வெற்றிகரமாகத் தன்னிறைவுடன் வாழ்ந்தார்கள். ஆனால் இன்றோ நாம், நாகரிகம் என்ற பெயரில் எதிர்கால சந்ததிகளின் இருப்பையும் கேள்விக்குறியாக்கிய வண்ணம் செல்கிறோம்.

இற்றைக்கு 50 ஆண்டுகள் பின்னோக்கிப் பார்ப்போமானால் யாழ்ப்பாணத்தில் எத்தனை குளங்கள் இருந்தன? இன்று எவ்வாறு அவற்றில் பல காணாமற் போயுள்ளன என்று பார்த்தாலே சுயநல மனிதத்துவம் மேலோங்கி இருப்பதை அவதானிக்க முடிகிறது.

யாழில் கடல்நீர் உட்புகுவதைத் தடுப்பதற்குரிய சிறந்த வழிதான் எமது குளங்கள் ஆகும். அதாவது மழைநீரைச் சேகரித்துவைத்து மழையில்லாக் காலங்களில் உபயோகிப்பதற்கும், இயற்கையாகவே மழை மூலம் பெறப்படும் நீரை நிலத்தில் உட்புகுத்தவும் குளங்கள் உதவுகின்றன. யாழ்ப்பாணத்தை நாங்கள் குடாநாடு என வரையறை செய்தாலும், நிலத்தடி நீர்ப்பிரச்சினையை ஆராயும் போது யாழ்ப்பாணத்தை ஒரு தீவாகவே கருதவேண்டியுள்ளது. அதன் காரணமாக கோடைகாலங்களில் நாங்கள் நிலத்தடிநீரை அதிகம் பயன்படுத்தும் போது, நிலத்தடி நீர் மட்டம் கடல்மட்டத்தினை விடவும் குறைவதால் அபாயகரமான வகையில் கடல்நீர் நிலத்தடிநீரினுள் புகுந்து கலப்பதை எதிர்கொள்கின்றோம். உதாரணமாக 40,000 சனத்தொகையுடன் குடி நீரில் தன்னிறைவு கண்டிருந்த காரைநகர் எனும் தீவு இன்று 11,000 பேருடன் தண்ணீர்ப்பற்றாக்குறையால் அன்றாட பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது. இவ்வாறான கவனயீனமான நிலத்தடிநீர் முகாமைத்துவம் தொடருமானால் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கு அந்நிலை விரைவில் ஏற்படுவதை யாராலும் தடுக்கமுடியாது.

இவ்விடயத்தில் மிகவிரைவாக நாம் செய்யவேண்டிய நடவடிக்கைகளில் ஒன்றுதான் அழிந்துபோன குளங்களை மீளுருவாக்கம் செய்வதும், குளங்களின் நீர்க்கொள்ளளவினை அதிகரிப்பதும் ஆகும். குளங்களின் கொள்ளளவினைக் கூட்டுவதற்கு இலகுவழியாக அணைக்கட்டை உயர்த்துவதைக் கூறலாம். ஆனால் நீரேந்து பிரதேசங்களில் உள்ள மாற்றங்களை ஆராயாமல் இதனைச் செய்யமுடியாது. இரண்டாவது வழிமுறை மழைநீருடன் சேர்ந்து குளத்தின் அடியைச் சென்றடைந்த உக்கல், மண் என்பவற்றை வெளியே எடுத்தல் ஆகும். இதனை எமது முன்னோர்கள் தூர்வாருதல் என அழைத்தனர். ஊர் கூடிக் குளத்தைத் தூர்வாரி அதில் கிடைக்கும் மண்ணுடன் சேர்ந்த உக்கல்களை சேதனப்பசளையாக விவசாயத்தில் உபயோகித்தும் வந்தனர் நம் முன்னோர். எனினும் தற்காலத்தில் ஊர் ஒற்றுமையும், அதன் மூலம் கிட்டும் மனிதவலுவைக்கொண்டு பொதுப்பணி செய்வதென்பதும் நம்மை விட்டு வெகுதூரம் சென்றுகொண்டிருக்கும் சிந்தனைகள் ஆகின்றன.

மூன்றாவதாகவும் ஒரு விவாதத்திற்குரிய வழிமுறையாகவும் எமது கையில் உள்ள முறையாகக் குளங்களை ஆழப்படுத்துதல்அமைகிறது. அது சாத்தியமான ஒன்றே. ஆனால் துறைசார் நிபுணர்களின் வழிகாட்டலிலும் முழுநேர மேற்பார்வையிலும் செய்யப்படவேண்டிய ஒரு முறையே இதுவாகும். இதனை நடைமுறைப்படுத்த பழமையான முறைகளுடன் தேவை ஏற்படும்போது நவீன முறைகளையும் இணைத்துக்கொள்ளலாம்.

இவ்விடயத்தில் முக்கிய விவாதப்பொருளாகக் காணப்படும் தலைப்பு குளத்தின் அடியில் உள்ள மண்ணின் நீரை உட்புகவிடும் தன்மையாகும். குளங்கள் மிகவும் குறைவான அளவில் நீரை உட்புகவிடும் தன்மையுடன்தான் இருக்கவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்களும் எனக்கில்லை. அதன்படிதான் மழையில்லாக் காலங்களில் நிலத்தடிநீரை உட்புகுத்துவதற்கு குளங்களில் தொடர்ந்தும் நீர் இருக்க வேண்டும்.

இது பற்றிய இரு வேறு முறைகளை நான் இங்கு கூறி இந்த விடைப் பகுதியை நிறைவு செய்ய விழைகிறேன். ஒன்று குளத்தின் அடியில் இருக்கும் களித்தன்மை கூடிய மண்ணைச் சேமித்து வைத்துக்கொண்டு நீரை வேகமாக உட்புக விடும் மணல் தன்மையான மண்ணை வெளியே எடுத்து மீண்டும் களித் தன்மையான மண்ணை ஒரு படலமாக அதற்குரிய இயந்திரங்களைக் கொண்டு உருவாக்குதல். தேவையேற்படின் களித்தன்மையான மண்ணை வேறு இடங்களில் இருந்து கொண்டு வந்தும் பயன்படுத்தலாம்.

இரண்டாவது முறையானது ஆழப்படுத்தியபின் சிமெந்தினைக் கொண்டு குளத்தின் அடியை மேம்படுத்தல் (Cement mixing) ஆனால் இம்முறை செலவுமிக்கதும் பல்வேறு சோதனைகளுடன் மிகவும் கவனமாகக் கையாளப்படவேண்டிய முறையாகும். மூன்றாவது ஒரு வழிமுறையும் உள்ளது. செயற்கையாக உருவாக்கப்பட்ட பிளாஸ்டிக் தடுப்புத்திரைகளை பாவிக்கும் இம்முறையானது மிகவும் ஆபத்தானது. என்னைப் பொறுத்தவரையில் இது சூழலுக்கு உகந்த முறையல்ல.

நிறைவாக யாழ்ப்பாணத்தில் குளங்களை ஆழப்படுத்தும்போது துறைசார் நிபுணர்களின் அர்ப்பணிப்புடனான பங்களிப்போடு இங்கு கூறப்பட்டுள்ள முறைகளில் ஒன்றுடன் சார்ந்த ஆழப்படுத்தலை அதற்கு உகந்ததென ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்பட்ட குளங்களுக்கு மாத்திரம் செய்யலாம் என்பதே எனது முடிவான கருத்தாக அமைகின்றது.



**உமாபதி குகரூபன்,**
*குடிசார் பொறியியல் முகாமையாளர்*

## கடந்த மாத அமர்வு:
# நீர்வள முகவர்கள்: காலத்தின் தேவையா? நீரியல் பயிற்சி முகாமும் படிப்பினைகளும்

WASPAR செயற்றிட்டத்தின் முயற்சிகளில் ஒன்றாக கடந்த மாதம் (டிசெம்பர்) 18,19,20ஆம் திகதிகளில் காரைநகர், அளவெட்டி, யாழ் பல்கலைக்கழகம் ஆகிய இடங்களில் தொடர்ந்து மூன்று நாட்களாக நீரியல் கற்கை முகாம் நடைபெற்றது. நிலத்தடிநீர் பற்றிய புவிசரிதவியல் பார்வையுடனான நீர்வள முகாமைத்துவம் பற்றிய பரந்த அறிவும் அனுபவமும் கொண்ட நிபுணர் முனைவர் யோகேஷ் ஜடேஜா இக் கற்கை முகாமின் வளவாளராக கலந்துகொண்டார். இம்முகாமில் நீரியல்துறையில் செயற்படுவதற்கான ஆர்வமுடைய நூறுக்கும் மேற்பட்ட ஆர்வலர்கள் சமூகத்தின் பல்வேறு பக்கங்களிலும் இருந்து கலந்துகொண்டிருந்தனர். அவர்கள் தம்மிடையே புதைந்திருக்கும் நீர்வளம் சார்ந்த பாரம்பரிய அறிவையும், அனுபவம் சார்ந்த பார்வைகளையும் பகிர்ந்து கொண்டமை அனைவருக்கும் மனநிறைவை அளித்தது. தேவைப்படுகின்ற திட்டமிடலுக்கும், நிலத்தடி நீர் பற்றிய சமூக மனோநிலை மாற்றத்திற்கும் இது அவசியமானதேயாகும்.

வடஇந்திய மாநிலங்கள் பலவற்றில் பரவலாக நிலவிவரும் நீர்நெருக்கடி, குடிநீரின் தரம், விவசாயத்துக்கான நீரின் நுகர்வு, அவற்றுடன் இணைந்து நிலத்துக்குக் கீழே ஆயிரம் அடிவரை சென்றிருக்கும் ஆழ்துளைக்கிணறுகளின் வகிபாகம் ஆகியவற்றையும் நன்கு விபரித்திருந்தார்.

இவ்விடயத்தில் குஜராத் மாநிலத்தின் மாதிரிக்கிராமங்கள் பலவற்றில் தான் சார்ந்த குழுமத்தின் இருபது ஆண்டுகால முயற்சியாக Arid Communities & Technologies நிறுவனம் உருவாக்கிய “பூஜல் ஜங்கார்” எனப்படும் மாற்றத்திற்கான செயற்பாட்டாளர்கள் பற்றியும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

கிராமவாசிகளும், நீரியல் அறிவில் போதிய தேர்ச்சிபெற்றவர்களுமாகிய இச் செயற்பாட்டாளர்கள் எவ்வாறு மத்திய அரசின் பேருதவியோடு இன்று பற்பல மாநிலங்களில் இயங்கத் தொடங்கியுள்ளனர் என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்.

இத்தகையதொரு முயற்சியை வட மாகாணத்திலும் ஏற்படுத்தி இடைநிலை நீர்வள முகவர்களை வடமாகாணத்தில் உருவாக்குவதற்கான சாத்தியப்பாட்டினை WASPAR செயற்றிட்டம் பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என இக்கற்கைமுகாமில் வலுயுறுத்தப்பட்டது.

காரைநகர்ப் பிரதேசத்தில் குடிநீர்த்தேவைக்கான நன்னீர் வளங்களைப் பேணுவதற்கும், வலிகாமப் பெரும் பகுதியினை ஊடறுத்துச் செல்லும் தொன்மைமிக்க நீரோடையான வழுக்கியாற்றை நன்னிலைக்கு மேம்படுத்தி அப்பிரதேசத்தின் மொத்த நீர்வளத்தை உறுதிசெய்வதற்கும் தமது கையிலுள்ள செயற்றிட்டத்திற்கு இப்பரீட்சார்த்த முயற்சி பொருத்தமானதென கற்கைமுகாம் ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

## அறைகூவல்!

காரை நலன்புரிச்சங்கத்தால் (ஐக்கிய இராச்சியம்) ஏற்பாடு செய்யப்பட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் காரைநகர் பட்டறையில் WASPAR செயற்றிட்டத்தின் இணைமுயற்சியாக 'நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி' என்ற தொனிப்பொருளில் கண்காட்சியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காரை 'சலஞ்சர்ஸ்' விளையாட்டு மைதானத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறும் இக்கண்காட்சியில் நிலத்தடிநீர், நீர் முகாமைத்துவம், நீரியற் பிரச்சினைகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் தெளிவபடுத்தப்படுத்தப்படவிருப்பதுடன். பாடசாலை மாணவர்களை ஊக்குவிக்கும்வகையில் போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

*எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி துளியின் 11 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடிவரும். வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna.** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்பவோ முடிந்த காரியம்!



இளங்கோ ஏரம்பமூர்த்தி
(சித்த ஆயுள்வேத
இயற்கை வைத்தியர், சுவிஸ்)



## புங்குடுதீவுக்குப் போய்வந்த கதை

மணிக்கூட்டுக்கோபுரம், முற்றவெளி, டச்சுக் கோட்டை, யாழ்ப்பாணக் கடற்கரை எல்லாம் பார்த்துக்கொண்டு புங்குடுதீவுப்பய ணம் தொடங்கியது. இவற்றை எல்லாம் பார்த்தவுடன் ஆயுள் வேத வைத்தியக்கல்லூரியில் படித்த காலம், நாற்பது வருடங்களுக்கு முந்திய பழைய நினைவுகள் எல்லாம் வந்துபோயின.

ஒருமுறை சட்டைப்பையில் வைத்திருந்த பத்து ரூபா நோட்டொன்றை வெளியே எடுத்தபோது முற்றவெளி யில் வேகமாக வீசிய காற்றுப் பறித்துக்கொண்டுபோக, துரத்திக்கொண்டுபோய், பிடிக்கமுடியாது போன போது அழுதுகொண்டு வீடுபோன காலத்தை நினைத்துச் சிரித்துக்கொண்டேன். இப்போது இலங் கையில் பத்து ரூபாத்தாளும் இல்லை. அதற்குப் பெறுமதியும் இல்லை. பத்துரூபா உலோக நாணயமா கத்தான் இருக்கின்றது. பார்க்கும்போது எங்கள் காலத் தில் புழக்கத்தில் இருந்த பத்துச் சதம் போல இருக் கின்றது.

நானும் பரமானந்தண்ணரும் சிவாண்ணரும் மற்றும் நண் பர்களும் டச்சுக்கோட்டை இடிந்த சுவரில் வரிசையாக இருந்து கடலைக்கொட்டை கொறித்தபடி உலகத்து விடயங்கள், எங் கள் பருவகால விடயங்கள் எல்லாம் அரட்டை அடித்துக் கொண்டிருப்போம். பண்ணைப்பாலம் வீதியை மிகவும் அழகாக அமைத்திருந்தார்கள். "காப்பற்றோட்"என்று இங்கு சொல்கிறார்கள். முன்பு குண்டும் குழியுமாக இருந்த வீதியை எமது சுவிஸ் நாட்டு வீதி போல அழகாகப் போட்டிருந்தார்கள். இடைக்கிடையே நிறுத்திக் கடலையும் வானத்தையும் இயற் கைக்காட்சிகளையும் இரசித்துக்கொண்டு போய்க்கொண்டி ருந்தேன். 'ஜீ.பி.எஸ்.' அழகாக வழிகாட்டிக்கொண்டிருந்தது.

அழகான கடல், தெளிவான நீலவானம் எல்லாம் நன்றாகத் தான் இருந்தன. ஆனால் கடற்கரையைத்தான் சில இடங்க ளில் பார்க்க முடியவில்லை. அவ்வளவு குப்பை, பிளாஸ்டிக் கழிவுகள் எல்லாம் போடப்பட்டிருந்தன. கைகள் கூசுவதில்லையா இந்த மனிதர்களுக்கு ? அதற்கு முந்திய வாரம் வட்டுக்கோட்டை போயிருந்தேன். போகும் வீதி ஓரங் கள், அடிக்கடிப் போய்வருகின்ற செம்மணிக்கடற்கரை எங்கு பார்த்தாலும் குப்பைகள்தான். சில இடங்களில் வயதானவர் களும் குழந்தைகளும் பாவித்த அழுக்கான பம்பர்ஸ், பெண் கள் பாவிக்கும் பாட்ஸ் எல்லாம் குப்பைகளுடன் எறியப்பட்டி ருந்தன. இவ்வளவுதூரம் பொறுப்பில்லாது மக்கள் நடந்து கொள்கின்றார்களே! நாங்களும் இங்கேயே இருந்திருந்தால் இப்படித்தான் நடந்துகொண்டிருப்போமா?

பிளாஸ்டிக் மக்கிப்போவதற்கு எத்தனையோ ஆயிரம் வருடங் களாகுமாமோ? எமது சந்ததியினருக்கு நாம் விட்டுச்செல்லும் புதையல் இவைதானா? இங்குள்ள நகராட்சியினர், அதிகாரி கள், அரசியல்வாதிகள் இவற்றைக் காண்பதில்லையா? சாதா ரண மக்களை விடுங்கள், இந்த அரசியல்வாதிகள் எல்லாம் சிங்கப்பூர் போன்ற அயல்நாடுகளுக்குப் போய்வருகிறார்கள் தானே. அங்கேசேரும் குப்பைகளை எவ்வாறு வளர்ந்த நாடு கள் நிர்வாகம் செய்கின்றன, எமது நாட்டையும் இவ்வாறு சுத்தமாக வைத்திருக்க என்ன செய்யவேண்டும் என்று இவர் கள் என்றாவது யோசித்திருப்பார்களா?

புதிய ஜனாதிபதி பழைய குப்பைகளை அகற் றப்போகிறாராமே. அப்படியே இந்தக் குப் பைகளையும் அகற்றி இனிமேல் அவ் வாறு சேராவண்ணம் நாட்டைச் சுத்தமாக வைத்திருக்க நடவடிக்கை எடுப்பாரா? நான் வசிக்கும் பேர்ண் நகரில் இவ்வா றான மக்காத குப்பைகளை எரித்து அதில் வரும் வெப்பசக்தியைப் பயன்படுத்தி அருகி லுள்ள வீடுகளுக்கும் மருத்துவமனைக் கும் தேவையான நீரைச்சூடாக்கவும், வீடுகளை வெப்பமூட்டவும் செய்கி றார்கள். நான் புங்குடுதீவு போனகதை எழுத ஆரம்பித்து வேறு ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறேன். என்ன செய்ய, ஆதங்கம்தான்! என்னதான் நாற்பது வருடங் கள் வெளிநாட்டில் இருந்தாலும், நான் பிறந்து வளர்ந்த என் தாய் நாட்டை இப்படியாக வைத்திருக்கிறார்களே என்ற ஆதங் கம். எவ்வளவு அழகான நாடு எங்கள் நாடு, எமது நாட்டில் எமது ஊருக்கு அருகில் உள்ள இந்த இடங்களையெல்லாம் பார்க்காது இத்தனைநாள் விட்டுவிட்டோமே. இப்படியான சிந்தனைகளுடன் போய்க்கொண்டிருக்கும்போது என்னு டைய வண்டி வேலணைக்கு வந்துவிட்டது. புங்குடுதீவுக்கு இன்னும் பன்னிரண்டு கிலோமீற்றர்கள் போகவேண்டும்.

இனித்தான் எனக்கு மிகவும் பிடித்தமான பயணம். இருபுற மும் கடல்நடுவில் போகின்ற வீதியில் பைக்கில் பயணிக்கும் அனுபவம் அலாதியானது. இதை நான் ஆனையிறவுக்கடல் நடுவே போகின்றபோது அனுபவித்திருக்கின்றேன். வெளிநாட் டார் எம் நாட்டுக்கு வந்து எங்கள் கடலையும் வெயிலையும் அனுபவிப்பதைப்போல் இந்தக்காற்றை அனுபவிப்பதற்காகவே இங்கே வரலாம் என்று நினைத்துக்கொள்வேன். வீசுகின்ற காற்று மெல்லிய உடைகளினூடே ஊடுருவி உடல் முழுக்கப் பரவுவதைச் சுகிக்கும் இன்பம் அற்புதமானது. மேல்நாட்டார் ஏழு கண்டங்களாக நிலத்தையும் ஐந்து சமுத்திரங்களாக நீரையும் பிரித்திருக்கிறார்கள். காற்றை அவ்வாறு பிரித்ததாகத் தெரிய வில்லை. ஆனால் எம் முன்னோர் வடக்கிலிருந்து வீசுவதை "வாடை" என்றும் தெற்கிலிருந்து வீசுவதை "தென்றல்" என்றும் கிழக்கிலிருந்து வீசுவதை "கொண்டல்"என்றும் மேற்கிலிருந்து வீசுவதை "மேலை" என்றும் காற்றையும் நான்காகப் பிரித்துவைத்திருக்கின்றார்கள். அதேபோல உடலினுள் உள்ள காற்றினை "தசவாயுக்கள்"என்றழைத்து பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர் மன்,கிருகரன்,தேவதத்தன், தனஞ்சயன் என்று எமது ஆயுர் வேத சித்தவைத்தியர்கள் பிரித்து வைத்திருக்கிறார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை காற்றானது வேலியில் லாது வரம்பில்லாது எங்கும் பரந்திருந்தாலும் இன்னும் பல வகைகளாகக் காற்றைப்பிரிக்கவேண்டும். ஆனால் எனக்கு மிகவும் பிடித்த காற்று இருவகை மட்டுமே. ஒன்று மீசாலை யில் நான் பிறந்துவளர்ந்த வீட்டின் முற்றத்தில் பாண்டிமா வின் கீழே சாய்மனைக்கட்டிலில் படுத்துக்கொண்டு கண் களை மூடி அங்குள்ள தென்னை, கமுகு, வாழை, மல்லிகை மற்றும் பூங்கன்றுகளூடாக வீசும் இளந் தென்றல். இரண்டாவது நான் முதலே சொன்னது போல கடல் நடுவே மோட்டார் சைக்கிளில் பயணப் படும்போது உடலை ஊடுருவிச்செல்லும் அற்புதமான ஆனந்தக்காற்று.

அந்த ஆனந்தக்காற்றை அணுஅணு வாக அனுபவித்தபடி புங்குடுதீவு மண் ணுக்கு வந்துசேர்ந்தேன்.




(பயணம் தொடரும்)



# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

எதிர்ப்புப் போராட்டத்தின்போது நந் திக்கொடியுடன் வலம் வந்தார் சுந்த ரலிங்கம். பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தை அறிமுகப்படுத் தியதைத் தொடர்ந்து வாகனங்க ளின் இலக்கத்தகடின் முன்னாலும் ශ්‍රී என்ற சிங்கள எழுத்தைப் பொறித் தார். அதுவரை காலமும் Ceylon என்பதை குறிக்கும் CE,CY,CL எனும் ஆங்கில எழுத்துக்களே வாக னங்களின் இலக்கத்தகடின் முன் னால் பொருத்தப்பட்டிருந்தன. பண் டாரநாயக்காவின் இந்த நடவடிக் கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக் கில் தமிழ்த்தலைவர்கள் தமிழில் ஸ்ரீ என்ற எழுத்தை தமது வாகனங்களின் இலக் கத்தகடின் முன்னால் பொறித்தவாறு யாழ்ப் பாணம்முற்றவெளியில் வலம்வந்தனர்.

14

சுந்தரலிங்கம் ஒரு படி மேலே சென்று தமிழில் ஸ்ரீ என்ற எழுத்தைத் தனது காரில் பொறித்தவாறு நந் திக்கொடியையும் பறக்கவிட்டவாறு வலம்வந்தார். யாழ்ப்பாணத்தின் கடைசி அரசனான சங்கிலியனின் கொடி நந்திக்கொடியே எனக் கூறப் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பி.தஸ்வின்**
தரம் - 6
உருத்திரபுரம் மகா வித்தியாலயம்

**பி.சங்கவன்**
தரம்- 6E
யா/ இந்துக் கல்லூரி





**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



**ஹரிணி**
தரம் - 6D
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை



**சி.பிரவின்**
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



**யோ.ஷாய்சரன்**
தரம் - 8c
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



**யோ.ஷாய்சரன்**
தரம் - 8c
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி



**பருஷயன்**
தரம் - 8H
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி



**S.ஹரிணி**
தரம் - 5
யா/உடுவில் மகளிர் கல்லூரி



**ச.ஜஷ்மிகன்**
தரம்9B
யா/மத்திய கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளில் தமிழறிஞர்:

## க. உமாமகேசுவரம்பிள்ளை (05.05.1934 - 20.04.2024)

19

# தமிழறிஞர்கள் இருவர் எழுதிய திருமுகங்கள்

○ பா.துவாரகன்

**வித்துவான் க. சேதுராமலிங்கன் எழுதிய கடிதம்**

பண்டிதர் உமாமகேசுவரன் திருமுறைப் பதிப்புப்பணி நிமித்தம் தமிழகத்தில் வாழ்ந்த காலை(1997- 1998) தமிழக அறிஞர்கள் பலருடன் ஊடாடும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றார்

தருமபுரம் ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் உமாமகேசுவரனது தமிழ்ப்புலமையால் ஈர்க்கப்பட்டு அவரிடத்துப் பெருமதிப்புக் கொண்டிருந்தார். சந்நிதானம் உமாமகேசுவரனுக்குக் கடிதம் எழுதும்போது வித்துவான் உமாமகேசுவரன் என்று விழித்தே எழுதுவார்.

உமாமகேசுவரனுக்கு இராமேச்சுரம் வித்துவான் க. சேதுராமலிங்கன் 1997.03.02 அன்று எழுதிய கடிதம் பின்வருமாறு:

பன்னிரு திருமுறைப் பதிப்புப் பணியில்
மன்னிய புலவ! மாண்புறு கவிஞ!
என்னுடை வணக்கம் இனிதே ஏற்பீர்!
உமாமகேஸ் வரனை உள்ளத் திருத்தும்
உமாமகேஸ் வரனே! உன்றன் உள்ளம்
திறந்து காட்டிய திருமடல் கண்டேன்
அம்மடல் தன்னை ஆசி மடலென
உள்ளத் திருத்தி உவகை கொண்டேன்.

கோவைமா வட்டத் தோரூர் குலவிடும் வெள்ளைக் கோயில்
நாவல! சென்று வந்தேன், நயப்புறு சென்னை சென்று
பாவல! பன்னாள் தங்கி பரிவுடன் இங்கு வந்தேன்
பாவலர் பலரைத் தந்த பறம்பையும்(1) சென்று வந்தேன்.

நார்மிகும் உளமே கொண்டீர் நலமுடன் மூன்றூர் தன்னில்
ஓர்பெற அடியேன் என்றும் இயங்கிடும் சைவம் தன்னின்
நீர்(2)பெற எடுத்துக் கூறி நேயமோ டிங்கு வந்தேன்
கூர்மையாம் புலமை யுற்றீர்! குருபரன் அருளால் வாழ்க!

சென்னையிலே பொன்னாடை யொன்று போர்த்திச்
சிறியனாம் எளியேற்கும் சிறப்புச் செய்தார்
மன்னுபுகழ்ப் பறம்பையிலும் மகிழ்வோ டெற்கு
மலர் முகத்தாற் பொன்னாடை போர்த்தி நின்றார்

சின்னவனாம் என்றனக்கும் சிறப்புண் டென்றால்
சீர்த்திமிகு சைவத்தின் சிறப்பை யெல்லாம்
பன்னுகின்ற(3) பான்மையினால் உண்டென் றோர்ந்தேன்
பரமனின் கடைமகனே அடியேன் அன்றோ.

சித்திரை பிறந்த பின்னர் சிறப்புறு மதுரை செல்வேன்
உத்தம உமாமகேஸ்வ ரப்பேர் ஒள்ளிய! நீடுவாழ்க
முத்தனே! எளியேன் இல்ல முகவரி தருவன் ஐயா
பத்தியால் மிக்கோய்! நீடு பரமன்றன் அருளால் வாழ்க!

"புனிதனாய்த் தம்பி ரானாய்ப் புகழொடும் பொலிக வென்று
கனிவுடன் வாழ்த்தி நின்றீர்! கற்றவ! இறைவன் ஆணை
இனியென்ன? அறிவார் யாரோ? என்றுமே சைவத் தொண்டில்
நனிசிறந் துழைக்க ஆவல் நம்பர்(4)தம் எண்ணம் யாதோ.

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பால் கிழமை தருமெனவே வள்ளுவர்தம்
பட்டறிவாற்(5) சொன்ன பரிசுணர்ந்தே உம்முடனே
நட்புமிகக் கொள்ளுவன் நான்.

**பேரன்புடைய பெரியீர்!**

அடியேன் வணக்கம். திருவருளால் குருவருளால் அடியேன் நலனே. தங்கள் நலனறிய அவாவுடையேன். "அழுக்காறு என ஒரு பாவி" என்று வள்ளுவர் சொல்வார். எனினும் தங்க ளைக்கண்டு, தங்கள் புலமையைக்கண்டு, கவிபாடும் ஆற்றலைக்கண்டு, அழுக்காறு கொள் கின்றேன்.

"கல்லாதான் கற்றகவி" போன்றும் "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானும் அதுவாகப்பாவித்து தானுந்தன், பொல்லாச் சிறகை விரித் தாடினாற் போன்றும்; அடியேனும் மடல் விடுத்துள்ளேன்.

இவற்றைக் கவிதையென்று எளியேன் சொல்லமாட்டேன்.

நமது குருமகாசந்நிதானம் அவர்கள் அறுவைச் சிகிச் சைக்குப்பின் பூரணநலம் பெற்றிருப்பார்களென எண்ணுகிறேன். சென்னைப்புலவர் திரு. க. ஆறு முக னார் அவர்கட்குக் கடிதம் எழுதியிருந்தேன். பதில் இல்லை.

திரு. இராமதாசு அவர்களும், திரு.குஞ்சிதபாதம் அவர் களும் தங்களுடன் பணிசெய்யும் விபரமும் அறிய ஆவல்.

---

1. பறம்பை - பரமக்குடி 2. நீர் - நீர்மையென்பதன் கடைக் குறை

3. பன்னுகின்ற - சொல்கின்ற
4. நம்பர் - சிவபெருமான் 5. பட்டறிவு - அநுபவம்

மேலுள்ள திருமுகம் உமாமகேசுவரன் மீது தமிழக அறிஞர் ஒருவர் கொண்டிருந்த பெருமதிப்புக்கு ஒரு சான்றாகும்.

**பண்டிதர் உமாமகேசுவரன் வித்துவான் சேதுராமலிங்கனுக்கு அனுப்பிய இரு கடிதங்கள் :**

வித்துவான் சேது ராம லிங்கனுக் கென்வ ணக்கம்
உத்தம உன்றன் அன்பை உன்னிடா நாளே யில்லை
சித்தத்திற் சிவனை வைத்த சீலவுன் பரிச யத்தால்
மெத்தவுள் ளுருகி யின்பம் மேவிட மகிழ்ந்தி ருந்தேன்

அத்தநீ திங்கள் ஒன்று அகலுமுன் இங்கி ருந்து
சத்தமே சிறிது மின்றிச் சடுதியிற் பிரிந்து போனாய்
வித்தக விநய மிக்கோய் விரும்பிநீ ஆற்று கின்ற
முத்தமிழ்ப் பணிகள் ஏதும் முன்னுள முடிக்கின் றாயோ

மதுரைநீ செல்வ தெப்போ மதுரையில் உறைவ தானால்
கதுமெனக் கடிதம் ஒன்று கட்டாயம் எழுத வேண்டும்
பொதுவினிற் ஷேம லாபச் செய்தியும் சொல்ல வேண்டும்
அதுமட்டும் அன்றுன் இல்ல முகவரி அதுவும் வேண்டும்

இனியென்ன இனிது வாழ்க இறைவன்இன் அருளால் என்று
கனிவுடன் வாழ்த்து கின்றேன் கடிதமும் நிறைவு செய்தேன்
மனிதரில் தேவ னான மனிதனே மடமொன் றெய்திப்
புனிதனாய்த் தம்பிரானாய்ப் புகழொடும் பொலிக வாழ்க!

மேலுள்ள கடிதம் அனுப்பிய திகதியை அறியமுடிய வில்லை. உமாமகேசுவரன் 1997.02.18 அன்று எழுதிய பிறிதோர் கடிதம் பின்வருமாறு:

**இன்றுன் கடிதமொன் றென்கரத் தெய்திற் றினிதுவந்தேன்**
**சென்றுசென் றெங்கணுஞ் சொற்பொழி வாற்றிடச்**
**சென்னையிலுங்**
**குன்றெனக் கல்விமி லோங்கு பரமக் குடியினிலும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழறிஞர் உமாமகேசுவரன்

மன்றினிற் பீதாம் பரங்கொண் டுணைப்போர்த்த மாண்பறித்தே
குங்குமத் தோடுவெண் ணீறிரா மேச்சுரக் கோயிலிலே
சங்கரற் கன்பொடு சாத்திய சற்பிர சாதமதாய்
இங்கெனக் கெய்திட ஏதென் தவமுனை யன்றியுண்டோ
பொங்குதண் கங்கைப் பிரவாக அன்பு பொழிபவரே

வேறு

குஞ்சித பாதம் ராமதாஸ் இணைந்து
திருமுறைத் தொழில்புரி கின்றார்
பஞ்சியால் அலுத்துப் பஸ்ஸினில் ஏறிப்
பறந்திடு வதுந்தொடர் கிறது
கஞ்சியே உண்டு குஞ்சித பாதம்
கடும்பிணி தாக்கிட நொந்து
தஞ்சையே சென்று தங்கியும் விட்டார்
தவிப்பொடுங் கரந்தையில் இன்று.

வேறு

புலவர் ஆறு முக(வ)னார்
போனார் சென்னை பின்பவர்
சலனம் ஏது மின்றியே
சார்ந்து விட்டார் தம்மனை
நிலைமை ஏதும் அறிகிலேன்
நீண்ட துயிலில் ஆழ்ந்துளார்
தலைமை யான பணிசெய்து
தளர்ந்து போனா ராகலாம்.

வேறு

குருமகா சந்நி தானம்
குறைவின்றிச் சிகிச்சை பெற்றுப்
பெருநல முற்றுப் பீடு
பெருக்கிநல் அருள் பொழிந்து
மருவுநல் அறங்கள் பேணி
மகிழ்வுடன் உள்ளார் என்றும்
**உருகிய அன்பி னோடே**
**உவந்துநாம் தொழுது வாழ்வோம்!**

(தொடரும்)



# சிலப்பதிகாரம் காட்டும் வணிகம்

பண்டைய தமிழ் இலக்கியங்களின் பல்பரிமாணத் தன்மையினை விளக்கும் முகமாக 'சிலப்பதிகாரம் காட்டும் வணிகம்' என்ற தலைப்பிலான இந்தக் கட்டுரைத் தொடர் சஞ்சீவியில் ஆரம்பமாகியுள்ளது. பண்டைய தமிழர் மருத்துவம், பண்டைக்கால தமிழர்களின் வணிகமும் வணிக நடைமுறைகளும், தமிழர் பண்பாடு, பண்டைய தமிழரின் சமூக நோக்கு, பண்டைய இலக்கியங்களின் பொருளாதாரக் கருத்துகள், அறக் கருத்துகள், சங்ககாலப் பெண் கவிஞர்களின் பார்வையில் பண்டைய தமிழர் வாழ்வியல், சமூக வாழ்வியலில் பெண்களின் வகிபாகம் போன்ற விடயங்களை இந்தக் கட்டுரைத்தொடர் வாராவாரம் வாசகர்களுக்குத் தரவுள்ளது.

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
*சந்தைப்படுத்தல் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

இலங்கை, இந்தியா போன்ற தெற்காசியா நாடுகளில் நாம் இன்றும் காணுகின்ற கூடார வண்டிகள், இரட்டைச் சில்லு வண்டிகள், அரசர்கள் தமது பாதுகாப்புத் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய மணித்தேர், உடல் முழுவதும் மறைத்துக் கொள்ளக்கூடிய கவசங்கள், ஆயுதங்கள், தோலால் செய்யப்பட்ட இடுப்புப் பட்டிகள், ஆயுதங்கள் (ஈட்டி, தோட்டி, முத்துக்கோள்கள், கிடுகின் பட்டம் காணப்பட்டம்), நறுமணம் வீசுகின்ற பூக்கள் போன்றன விற்பனைக்காகக் குவிக்கப்பட்டிருந்தன. இச்செயற்பாட்டால் மதுரை அங்காடி வீதிகளில் அரசர்களும் சாமானியர்களும் ஒருமித்தவர்களாய் ஒன்றாகக் கொள்வனவு செய்கின்ற சமத்துவம் நிறைந்த கொள்வனவு நடைமுறையினை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. மதுரைநகர் வீதிகளில் அமைந்துள்ள இரத்தினக்கற்கள் மற்றும் பொன் விற்பனை செய்கின்ற கடைகளில் மதுமம், நீலம், விந்தம், படிதம் என்கின்ற நான்கு வகையான மாணிக்கக் கற்கள், ஒன்பது வகையான மணிகள் (வைரம், மரகதம், மாணிக்கம், புட்பராகம், வைடூரியம், நீலம், கோமேதகம், முத்து, பவளம்), மேலும் சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்புந்தம் என்னும் பொன்வகைகளினை நன்கு அறிந்த வணிகர் பொன்கடை வீதியில் வணிகம் செய்தனர் என சிலம்பு இயம்புகின்றது. தொண்டிப் பகுதியிலுள்ளோர் நிறையாக இட்ட அகிலும், துகிலும், ஆரமும் வாசமும், கருப்பூரமும் ஏற்றிய கப்பல்கள் பாண்டி நாட்டில் அவற்றினை விற்பனை செய்தன. (14: 106 112). உள்நாட்டில் உற்பத்தி செய்த பண்டங்கள், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் அடங்கிய பொதிகளில் பெயர், அளவு, எடை மற்றும் அடையாளம், எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன. மேலும் இத்தகைய பொருள்கள் பாதுகாப்பாக நிலத்துக்கு அடியில் அமைந்த அறைகளில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கிடங்குகளின் வாசல்களில் வாயிற்காப்பாளர்களும் இல்லை, கதவுகளினைப் பூட்டிக்கொள்வதற்கு கனதியான தாழ்ப்பான்களும் இல்லை. ஆனால் அங்கு பொருள்கள் திருடப்படும்போது திருடியவர்கள் திருடிய பொருள்களினைத் தலைமீது சுமந்து நகரினைச் சுற்றிவரவேண்டும் என்ற தண்டனை வழங்கப்பட்டதுடன், திருடிய பொருள்களினைத் திருடர்களிடமிருந்து பறிமுதல் செய்து அவை உரிய நபர்களுக்கு ஒப்படைக்கப்படும். இவ்வாறு வணிகச் செயற்பாடுகளில் வணிக ஒழுக்கம் அல்லது அறம் காணப்பட்டதுடன் அரசின் பங்களிப்புகளும் காணப்பட்டன. இதன்விளைவாக வணிகம் செழித்து வளர்ந்திருந்தது.

### வணிக சமூகத்தின் சமூக, பொருளாதாரக் கட்டமைப்பு

தமிழ் இலக்கியங்களில் குறிப்பாக சங்க இலக்கியங்கள் மற்றும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களில் வணிகர்களினையும், அவர்களுடைய சமூக பொருளாதாரத்தினையும் அமைப்பியல் ரீதியாகவும், பண்பியல் ரீதியாகவும் சித்தரித்துள்ளனர். புகார் நகரில் வாழ்ந்த வணிகர்கள் நாவாய் மூலம் கடல் கடந்து பொருள்களினை ஏற்றிச்சென்று செல்வங்களினை ஈட்டுவதில் அதிக கவனமாகவும் ஆர்வமாகவும் இருந்தனர். கடல் மார்க்கமான வியாபாரங்கள் மிகவும் ஆபத்து நிறைந்தவையாக இருந்தன. சில சந்தர்ப்பங்களில் கடல்மாதாவின் சீற்றத்தால் படகுகள் கவிழ்ந்து நடுக்கடலில் வணிகர்கள் இறந்த சந்தர்ப்பங்களும் உள்ளன. கடலில் ஏற்படுகின்ற விபத்துகளிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களும் உள்ளனர் என்ற செய்தியைப் பண்டைய காப்பியங்கள் குறிப்பிட்டுள்ளன. பண்டைய காலத்தில் வாழ்ந்த வணிகர்கள் அரசர்களினால் புகழ்ந்து போற்றப்பட்டனர். போற்றுகின்ற அளவிற்கு கீர்த்தியும் செல்வச் செழிப்பும் உடையவர்களாக இருந்தனர். மேலும் வியாபார நோக்கத்துக்காக கடல் கடந்து வாழ்கின்ற மக்கள் கூட்டம் புகார் மற்றும் மதுரை போன்ற பெரும் நகரங்களில் வாழ்ந்தனர். அவர்கள் மக்கள் விரும்பிய அனைத்துப் பொருள்களையும் சலிப்பு ஏதுமின்றி வழங்குபவர்களாகவும் இருந்தனர். நாம் இன்று பேசுகின்ற வாடிக்கையாளர்களினை அல்லது நுகர்வோர் மையப்படுத்திய சேவைகளினை வழங்கக் கூடியவர்களாக அன்றைய வணிகர்கள் காணப்பட்டனர். இதற்குப் பின்வரும் மனையறம்படுத்தகாதை வரிகள் ஆதாரமாக அமைகின்றன. (2:15) வணிகர் பல நற்காரியங்களினைச் சமூகத்தின் முன்னேற்றம் கருதி அக்கறையுடன் செய்பவர்களாகவும், வணிக குலத்துக்கே உரிய குலப் பண்பு சற்றும் குறையாதவர்களாகவும், துருவ நட்சத்திரங்கள் போல் மிளிர்ந்தவர்களாகவும் அதாவது தனித்தன்மை வாய்ந்த சிறப்புகளுடன் வாழ்ந்தார்கள் என்பதையும் பின்வரும் சிலம்பு வரிகளின் வாயிலாக அறிந்துகொள்ளக்கூடியதாகவுள்ளது.

*குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்*
*அத்தரு திருவின் அருந்தவம் முடித்தோர்*
*உத்தர குவின் ஒப்பத் தோன்றிய*
*(சிலம்பு 2:810)*

வணிகர்கள் ஏனைய சமூகத்தினர்களினால் அதிகமாக விரும்பப்பட்டவர்களாகவும், அங்கீகரிக்கப்பட்டவர்களாகவும் காணப்பட்டனர். இவ்வாறான வணிகர்களினை மாநாயக்கர்கள் என்றும் அழைத்தனர். மேலும் அக்காலத்தில் வணிகர்கள் பௌத்த சமண மதங்களினைப் பின்பற்றியதோடு ஆளும் வர்க்கத்தினருடன் மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டிருந்ததுடன் அவர்களின் விசுவாசத்துக்கும், அன்புக்கும், ஆதரிப்புக்கும் உரியவர்களாக இருந்ததுடன், அரசர்கள் வாழ்கின்ற வீதிகளிலேயே மாடமாளிகைகள் விலை உயர்ந்த முத்துக்கள், மணிகள் போன்றவற்றினைப் பதித்துக்கொண்ட ஆடைகளையும் அணிந்து பெரும் ஆடம்பரமான அதாவது மன்னர்களின் வாழக்கை முறைக்கும், வாழ்க்கைத் தரத்துக்கும் சமமான ஓர் வாழ்கையினை வாழ்ந்தனர். இதற்கான இலக்கிய ரீதியான சான்றுகள் மதுரைகாஞ்சி, பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்களில் காணப்படுவது போல் சிலப்பதிகாரத்திலும் காணப்படுகின்றது. (சிலம்பு 5 : 12 ,4142).

### முடிவுரை

அறம் பிழைத்தோருக்கு அவ் அறமே ஊறு விளைவிப்பதாய் அமையும் என்ற ஒப்பற்ற நீதியை உலகுக்கு உணர்த்துவது சிலப்பதிகாரம். இந்த ஒப்பற்ற ஒழுக்கத்தினை இளங்கோவடிகள் கதைசொல்லும் உத்திகளின் பிரகாரம் பாத்திரப்படைப்புக்களாக வணிக குலத்தைச் சேர்ந்த நாயகன், நாயகியைத் தேர்ந்தெடுத்து பண்டைய தமிழர் வாழ்வியலில் வணிகமும் வணிக ஒழுக்கமும் எவ்வாறு மேன்மை பெற்று விளங்கியன என்பதனையும், அறந்தவறியவன் வாழ்வு நிலைகுலைந்தது என்பதையும் எடுத்துக்காட்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்ந்தினம்

பாகம் 3

இராகவன்

திரும்பவுமொருக்கால் இந்தப் போஸ்கார்ட்விசயத்தைக்கதைக்க வேண்டியிருக்கு. பொதுவாக ஏதும் கூட்ட அழைப்புகள் எண்டால் அழைப்பு அனுப்புற ஆக்கள் போஸ்கார்ட்டைத்தான் பாவிப்பினம். இதிலயும் இரண்டு விதமிருக்குது. முதலாவது, கூட்டம் நடக்கிற இடம், நேரம், திகதி எல்லாத்தையும் கையால எழுதித் தவறாமல் சமுகமளிக்கவும் எனக் குறிப்பிட்டு அனுப்புவினம். இரண்டாவது இதேவிசயத்தை ரைப்பண்ணி அல்லாட்டில் அச்சடிச்சு ஒட்டி அனுப்புவினம். அதைவிட அவசர அலுவல் எண்டாலும் போஸ்கார்ட் அனுப்புவினம். இதில எனக்கொரு நேரடி அனுபவமிருக்கு. எனக்கு அப்ப எட்டு ஒன்பது வயதிருக்கும். வீட்டில ஒரே பிரச்சினை. அண்ணாக்கள் அடிக்கடி சண்டைபிடிப்பாங்கள். அப்ப அப்பாவும் ஊரோடயில்லை. 1983 வரைக்கும் யாழ்ப்பாணத்துக்குள்ள வேலை செய்தவர். ஜூலைக்கலவரத்துக்குப் பிறகு இரத்தினபுரிக்கு மாற்றம்வந்து போகிட்டார். அதுக்குப்பிறகு அவரோட ஒரு தொடர்புமில்லை. கடிதங்கிடிதமொண்டும் வாறதுமில்லை. சம்பளமும் வாறதில்லை. மூத்தண்ணா ரியூசனில படிப்பிச்சதால வீட்டுச்செலவுக்குப்பிரச்சினையில்லையெண்டாலும் அம்மாவின்ரபாடு கொஞ்சம் கஸ்ரமாத்தானிருந்தது. அப்பதான் ஆரோ மூத்தண்ணாட்ட "முருகையன் கோயில் ஐயரிட்டைப்போய் நினைச்ச காரியம் கேட்டால் எல்லாம் சரிவரும்" எண்டு சொல்லியிருக்கினம். அப்ப முருகையன் கோயில் ஐயராயிருந்தவர் அமாவாசைக்குருக்கள் எண்டொராள். ஆள் நல்ல வளத்தி, கன்னங்கறுவல், காதில கடுக்கன் போட்ட மொட்டையர். அந்த முருகையன் கோயில் சோனப்பு றோட்டில மத்தொனிக் கலைவாணி வாசிகசாலையைக் கடந்து தெற்கு நோக்கிப்போக வலதுபக்கம் றோட்டோடாயிருக்கு. இன்னும் விளக்கமாகச் சொன்னால் நல்லாட்சிக் காலத்தில் ஜனாதிபதியாயிருந்த மைத்திரிபால சிறிசேனா வந்து ஒரு குடிநீர்த்திட்டத்தைத் தொடங்கிவைச்சவர் எல்லோ? அதில ஒரு பெரிய நீர்த்தாங்கி கட்டியிருக்கும். உப்பு வல்லைச் சந்தியால மண்டான் றோட்டுக்குத் திரும்பினால் சோனப்புவை நோக்கிப் போகேக்குள்ள அந்த நீர்த்தாங்கி தெரியும். அதுக்குப் பக்கத்திலதான் இந்த முருகையன் கோயில் இருக்கு.

13

சரி இப்ப விசயத்துக்கு வருவம். மூத்தண்ணா உடனடியாய் முருகையன் கோயில் ஐயரிட்டைப் போயிருக்கிறான். அவர் அவன் சொன்னதைக் கேட்டுப்போட்டு "தம்பி உம்மட வீட்டுத்தண்ணி விழுகிற தாழ்வாரத்துக்கடியில் ஒரு செய்வினைப்பகுதியிருக்கு. அதை எடுத்துப்போட்டுவா மிச்சத்தைச் சொல்லுறன்" எண்டு சொல்லியனுப்பியிருக்கிறார். மூத்தண்ணா வந்து இதை நவண்ணாட்டச் சொல்ல எங்கடை வீட்டுத்தண்ணி விழுகிற தாவாரத்தை றவுண்ட் பண்ணி ஒவ்வொரு அடியாய் அளந்து போட்டுக் கொஞ்சம் கொஞ்சமாய் மண்ணை வெட்டியெடுத்து விறாந்தையில குவிச்சுப்போட்டு மூத்தண்ணா, இளையண்ணா, அம்மா, நவண்ணா, நான் எண்டு அஞ்சு பேரும் மண்ணைக் கையால உருத்தி உருத்திப் பாத்தம். உருத்தேக்குள்ள வித்தியாசமான சாமானேதும் கிடைச்சால் அதுதான் செய்வினையெண்டு நவண்ணா சொல்லியிருந்தான். இரண்டு மூண்டு நாளாய்த் தாவாரத்து மண் முழுக்க வெட்டியெடுத்து விறாந்தையில கொட்டி நாங்கள் சலிச்சுச் சலிச்சுத்தேடியும் ஒரு மண்ணும் கிடைக்கேல்ல. மூத்தண்ணா திரும்பவும் முருகையன் கோயில் ஐயரிட்டப்போனான். அவர் "தம்பி இன்னுமந்த வினைப்பகுதி அதேயிடத்திலதான் இருக்குது! போய் எடுத்திட்டு வா!" எண்டார். அவன் திரும்பிவந்து நவண்ணாட்ட விசயத்தைச் சொன்னான். நவண்ணா நெற்றியில சுட்டுவிரலை வைச்சுத்தேச்சுப் போட்டு, "இதுக்கு ஒரேயொரு வழி அண்ணாவைக் கூப்பிடுறதுதான்" எண்டுட்டுத் தன்னட்டயிருந்த போஸ்கார்ட் கட்டிலயிருந்து ஒண்டையெடுத்து, "அண்ணா அவசரம்! உடனடியாக வீட்டுக்கு வரவும்! நவம்" எண்டு எழுதிப்போட்டு பெரியாம்பியண்ணையின்ர கடையிலிருந்த தபால் பெட்டிக்குள்ள போட்டான்.

(தொடரும்)

## பூகோள வெப்பமடைதலைத் தடுப்பதில்

# COP 29 காலநிலை மகாநாட்டின் தோல்வி

கலாநிதி. எஸ். அன்ரனி நோர்பேட்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
கொழும்புப் பல்கலைக்கழகம்

இன்னொரு ஏமாற்றம் தரும் முடிவு என்னவெனில் சுவட்டு எரிபொருள்களிலிருந்து நிலைமாற்றம் பெறுவதற்கான அழைப்பினைப் புதுப்பிப்பதில் இந்த மாநாடு தோல்விகண்டுள்ளது. இவ்விடயம் துபாயில் இடம்பெற்ற உச்சி மாநாட்டில் முன்னிலைப்படுத்தப்பட்ட முக்கியமான செய்தியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தவிர்த்துவிட்டமை காலநிலை நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நிலநெய் மற்றும் வாயு உற்பத்தியைத் தொடர்ந்து விரிவாக்கிவரும் ஆக்டிக் உட்பட்ட நாடுகளுக்கு ஒரு மோசமான சமிக்ஞையைக் கொடுத்துள்ளது. ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகள் ஆக்டிக்கில் நிலநெய் மற்றும் வாயுவை அகழ்ந்தெடுப்பதற்கான அனுமதிப்பத்திரங்களை இன்னமும் வழங்கிவருகின்றன. இத்தகைய சுவட்டு எரிபொருள் செயற்றிட்டங்களின் விரிவாக்கமானது கோளத்தின் மிக இலகுவில் பாதிக்கப்படக் கூடிய பிரதேசங்களுள் ஒன்றாக விளங்கும் ஆக்டிக் சூழற்தொகுதிகளுக்கு மேலும் ஆபத்தை ஏற்படுத்தும்.

உலகம் முழுவதற்குமான இயற்கைக்கான நிதியின் (WWF)பூகோள ஆக்டிக் நிகழ்ச்சித்திட்டத்தில் COP 29 இல் இத்தகைய சுவட்டு எரிபொருள் செயற்றிட்டங்களை விசேடமாக, உயிர்ச்சூழலியல் ரீதியான உணர்திறன் மிக்க பகுதிகளில் விரிவாக்கம் செய்வதை நிறுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறியுள்ளது. ஆக்டிக் உயிர்ப்பல்வகைமை மற்றும் உறுதித்தன்மை மீது பெரும் அழிவுதரும் தாக்கங்களை இப்பிரதேசங்களில் தவிர்ப்பதற்குக் கைத்தொழிலாக்கத்தை மேலும் விரிவுபடுத்துவதைத் தடுப்பதன் அவசரத்தேவையை வலியுறுத்தி இம்மாநாட்டின்போது ஓர் ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது. பூகோள காலநிலையை ஒழுங்குபடுத்தும் முக்கியமான சூழற்தொகுதிகளின் இழப்பும் கடல் மட்ட உயர்ச்சிகள் போன்றவற்றினைத் தடுப்பதற்கான செயலற்ற நிலைமைகளும் உள்நாட்டுக்குரியவை அல்ல. அவை பூகோளத்தில் மிகப்பெருமளவான தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடியவை.

3

### காலநிலை நிதி

ஐக்கிய நாடுகளின் காலநிலைமாற்றம் பற்றிய சமவாயச் சட்டகம் (UN FCCC) என்பதன் நிலையியற் குழு பின்வருமாறு கூறுகின்றது:

"காலநிலை நிதியின் இலக்கு என்பது வெளியேற்றங்களைக் குறைத்தலும் பச்சைவீட்டு வாயுக்களின் தேக்கத்தை வலுப்படுத்தலுமாகும். பாதிக்கப்படும் தன்மையைக் குறைத்து மீளும் தன்மையை அதிகரித்தலும் பராமரித்தலுமாகும். மானிட மற்றும் உயிர்ச்சூழற்தொகுதிகளில் ஏற்படும் எதிர்மறையான காலநிலைத் தாக்கங்களைக் குறைத்தல், தணித்தல் மற்றும் மாற்றியமைத்தல், உலகின் எந்த இடத்திலும் உள்ள சகல பொருளாதாரத் துறைகளிலும் காலநிலைமாற்றத்தைப் பற்றிப் பேசுவதற்கு உதவும் நோக்குடன் சகலவிதமான நடவடிக்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது செயற்றிட்டங்களுக்கு நிதிப்பாய்ச்சலை வழங்குவதுதான் காலநிலை நிதியாகும்."

ஐக்கிய நாடுகளின் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வது தொடர்பான முன்நோக்கிய செயற்பாட்டில் பாரிஸ் உடன்படிக்கையின் கீழ் புதிய வளர்ச்சிப் படிவம் ஊக்குவிக்கப்படுகின்றது. இம்மகாநாட்டில் காலநிலை நிதிக்கான மூன்று முதலீட்டு முன்னுரிமைகள் இனங்காணப்பட்டுள்ளன. (1) நிதியிடல் என்பது சக்திவலு நிலைமாற்றத்தைத் துரிதப்படுத்துவதை நோக்கியதாக இருக்கவேண்டும். குறிப்பாகப் புதுப்பிக்கக் கூடியவற்றை விரிவாக்குதல். பாரிஸ் உடன்படிக்கையின் இலக்குகளை நிலைபெறச் செய்வதற்கு இது மிக அவசியம். (2) உயிர்கள் மற்றும் வாழ்க்கைத் தொழில்களைப் பாதுகாப்பதற்கான மீளுருவாக்கலில் அதிகரித்த முதலீடுகள் தேவையானது. குறிப்பாக உலகின் மிக வறுமையான சமூகங்களிடையே அழிவுமிக்க காலநிலைத் தாக்கங்களின் பாதிப்புக்களின் அதிகரிப்புக்கு எதிராக இழப்பு மற்றும் சேதங்களுக்கு முறையாக நிதியிடப்பட்ட பொறிமுறைகள். (3) மனித இனம் தங்கியிருக்கும் உயிர்ப்பல்வகைமையை வலுப்படுத்தல் மற்றும் சூழற்தொகுதிகளைப் பேணிப் பாதுகாத்தலை வலுப்படுத்த வேண்டிய அவசரத் தேவையுள்ளது. மீளுருவாக்கம், கட்டியெழுப்புதல் மற்றும் வெளியேற்றங்களைக் குறைத்தல் ஆகியவற்றுக்குப் பங்களிக்கும் முதலீடுகள் அவசியம்.

இத்தகைய முதலீடுகளின் அரைவாசி நிதியிடலானது வளர்முக நாடுகளின் உள்நாட்டு பொது மற்றும் தனியார் மூலங்களிலிருந்து பெறப்படவேண்டும். ஏறக்குறைய மேலதிகமாக ஒரு மில்லியன் டொலர்கள் வருடாந்தம் வெளி மூலங்களிலிருந்து பெறப்படவேண்டும். பூச்சிய வெளியேற்றங்கள் மற்றும் காலநிலை மீளுருவாக்கல் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான வளர்ச்சியடைந்துவரும் சந்தைகளிலிருந்து கவர்ச்சிகரமான வருமானத்தைப் பெறும் நிலையிலுள்ள தனியார் துறையிடமிருந்து பாரிய பங்களிப்பு அவசியமானது. தனியார் மற்றும் பொதுத்துறைக்கு இடையில் காணப்படும் வலிமையான கூட்டுப்பங்காண்மை புதிய முதலீட்டுக்கான சந்தர்ப்பங்களைத் திறந்துவிடும். இதனால் ஆபத்துக்களைச் சமாளிக்கமுடியும். மூலதனச் செலவைக் குறைக்கமுடியும். பாரிய அளவுத்திட்டத்தில் தேவையான நிதியை வழங்கமுடியும். ஆனால் இந்த நிதியிடலானது சரியான மூலங்களிலிருந்து வரவேண்டும். காபன் நடுநிலையிலிருந்து நிலைமாற்றம் பெற்று முன்னோக்கிச் செல்வதற்கான தேவை எல்லா நாடுகளுக்கும் உள்ளது. செல்வந்த நாடுகள் தமது வெளியேற்றங்களைக் குறைப்பது மாத்திரமன்றி ஏனைய நாடுகளுக்கு உதவும் வகையில் நிதியினை உருவாக்கி உலகின் வறுமை நாடுகளைப் பாதுகாப்பதற்கு உதவுதல் வேண்டும்.

(தொடரும்)

# அதிர்ஷ்டத்தால் தப்பிய கைதி!



(சென்றவாரத் தொடர்ச்சி)

கே.வி.தவராசா

### உயர் நீதிமன்றில் மனு

கைதுசெய்யப்பட்டு 90 நாள்களுக்கு மேல் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவில் சட்டரீதியற்ற முறையில் தான் தடுத்து வைக்கப்பட்டமைக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புப்பிரிவின் பொறுப்பதிகாரி பிரசன்னா டி அல்விஸ், பணிப்பாளர் சந்திரா வாகிஸ்டர், பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ச, சட்டமா அதிபர் ஆகியோரைப் பிரதிவாதிகளாகக் பெயர் குறிப்பிட்டு உயர்நீதிமன்றில் தடுப்புக்காவல் கைதியான தியாகராஜா மோகனரூபன் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசா அடிப்படை மனித உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்தார்.

### இடைக்கால உத்தரவு

உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஷிராணி பண்டாரநாயக்க, ராஜா பெர்னாண்டோ, சலீம் மர்சூப் ஆகிய நீதியரசர்கள் மனுதாரரான மோகனரூபனை உடனடியாக சிறைச்சாலை பிசுக்காலின் கட்டுக்காப்புக்கு மாற்றும்படி 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி இடைக்கால உத்தரவு பிறப்பித்தனர். உயர்நீதிமன்றின் இந்த உத்தரவையடுத்து மனுதாரரான மோகனரூபன் உடனடியாக வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். இந்த உத்தரவை அடிப்படையாகக்கொண்டு அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின்கீழ் நீண்ட காலமாகத் தடுத்துவைத்து விசாரணை செய்யப்பட்ட ஏனைய பல அரசியல்கைதிகளும் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பிரதான நீதவானின் உத்தரவுக்கமைய சிறைச்சாலைகளின் (Custody of the Fiscal) கட்டுக்காப்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

### தடுப்புக் காவல் உத்தரவு

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட மனுதாரரான மோகனரூபனை மீண்டும் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுப் பொலிஸார் தமது கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரத் திட்டமிட்டனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 9(1) பிரிவின்படி பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியிடமிருந்து தடுப்புக்காவல் உத்தரவு ஒன்றினை 2009.10.08ஆம் திகதி பெற்று, மனுதாரரான மோகனரூபனை மீண்டும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுக்குக் கொண்டுவந்து விசாரணைகளை நடத்தத்தொடங்கினர்.

பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவில் தியாகராஜா மோகனரூபன் அல்லது முரளி என அழைக்கப்படும் இந்தக் கைதி புலிகளின் உளவுத்துறையைச் சேர்ந்த உளவாளியெனவும், முன்னாள் கடற்படைத் தளபதியான தயா சந்திரகிரியை தற்கொலை குண்டுதாரி மூலம் படுகொலைபுரியச் சதி செய்துள்ளாரெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது




பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுப் பொலிஸார், நீதிமன்ற அனுமதியின்றி மீண்டும் விசாரணைக்கென மனுதாரரான மோகனரூபனை சிறைச்சாலைக் கட்டுப்பாட்டிலிருந்து பயங்கரவாதத் தடுப்புப்பிரிவுக்கு மேலதிக விசாரணைக்காக கொண்டுசென்ற விடயம் உயர் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. உயர் நீதிமன்றின் நீதியரசர்கள் பொலிஸாரின் இந்த நடவடிக்கைகள் சட்டத்துக்கு முரணானது மட்டுமின்றி இந்தச் செயலானது நீதிமன்றினால் சகித்துக்கொள்ள முடியாததெனவும் தமது தீர்ப்பை 2009.12.16 ஆம் திகதி வழங்கினர். இதன் பின்னர் பொலிஸாரினால் மோகனரூபன் மீண்டும் சிறைச்சாலையின் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

(வழக்கு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org